இதுவன்றோ எழில்பூமி!

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

தி.மு.க. வார வெளியீடு

5-5-61] :-: [விலை 16 காசு



யாரும் யாரையும் ஏமாற்றுவதில்லை! இன்பம் எங்கும் மணக்கிறது!!— நம்பிக்கை அரசோச்சும், நல்லதொரு நகரம்--செவாஸ்டபூல்.

அண்ணல்

நல்லெண்ணெயில் கடலையெண்ணெயைக் கலக்கிறார்கள். பாலில் தண்ணீரைக்கலந்துவிற்கிறார்கள் அணைக்கட்டு, ஆலை முதலியவைகளைக் கட்டுவதற்கு ஒப்புக்கொண்ட காண்டிராக்டர், ஒழுங்காக நடக்கிறார்கள் என்று கூறுவதற்கில்லை. ஓட்டலுக்குச் சாப்பிடப்போனால், எப்படிப்பணம் கொடுக்காமல் ஏமாற்றலாம் என்றுஎண்ணுபவர்களும்உண்டு. னிமா டிக்கட் வாங்குவதில்கூட,

கலையும் வாழ்வும் களிநடனமிடுகிறது! ஏழையென்றும் சீமானென்றும் இல்லாததால், ஒரே இடத்திலிருந்து உன்னதமான கேளிக்கைகளைக் காணப் போகின்றனர்!!

'கள்ள மார்க்கெட்' இருக்கிறது. மக்களுடைய மனதையெல்லாம் நல்வழிப் படுத்துவதற்காக இருக்கின்ற அரசியலில்கூட "சம்பாதிக்க ஆசைப்படுகிறவன்" நுழைகிறான்! தனிக் கட்சியும் அதன் மூலம் தொடர்புகளும் கொண்டு தன்னுடைய சுயநல ஆசைகளை அடைய எண்ணுகிறான்!!

வேட்டியைத் திருடினான் — வீட்டில் புகுந்து சோற்றுப் பானையை எடுத்துக் கொண்டு போனான்—குழந்தையின் கழுத்தை நெறுக்கிச் சங்கிலியைக் களவாடினான் —கள்ளநாணயம் தயாரித்தான்—பார்லிமெண்ட் உறுப்பினர் என்கிற பதவியை வைத்து 'வெங்காய' பர்மிட் வாங்கிக் கொடுத்து மாடிவீடு பெற்றான்—என்பன போன்ற செய்திகளை, 'தினஇதழ்'களைப் பிரித்தால் 'தினசரி காண்கிறோம்! அப்படிப்பட்ட தினஇதழ்களை நடத்துவோரே, பலதில்லுமுல்லுகளைச் செய்தே, வியாபாரத்தை நடத்துவதையும் பார்க்கிறோம்!!

மனித உலகில், ஏனிந்த எண்ணம் உருவாகிறது? ஏன் கள்ளன் உண்டாகிறான்? இன்னொருவனை ஏமாற்றிப் பிழைக்க வேண்டிய அவசியம் என்ன? சொத்துக்காக அண்ணன் தம்பிகளுக்குள் ஏன் அடிதடிச் சண்டை ஏற்படுகிறது? அவளுக்கு பெரியநகை போட்டாய், எனக்கு ஏன் போடவில்லை என்கிற சண்டைகள் குடும்பத்துக்குள் ஏன் உண்டாகின்றன? எதற்காகப் பாலில் தண்ணீரைக் கலக்கும் ஆசை—ஏற்படுகிறது? இன்னொருவனை ஏமாற்றியாவது தான் வாழவேண்டும் என்கிற அளவுக்கு ஏன் மனிதனுடைய மனம் கல்லாகிறது? குழந்தையைக் கொன்றுவது, தங்கச்சங்கிலியை அபகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பாடுவானேன் மக்களுக்காகப் பணிபுரிய வந்தவன் அந்த மக்களை ஏமாற்றி தன் சுயநலத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டிய 'தலைவராக' ஏன், ஆகிறான்?

* * *

இந்தக்கேள்விகளை, 'மேதினம்' கொண்டாடப்பட்ட இந்த நேரத்தில், நாம் நினைத்தாவது பார்க்க வேண்டும். சமூகம் என்பது, திருடர்களும், வஞ்சகர்களும், எத்தர்களும், ஏமாற்றுக்காரர்களும் நிரம்பியதாகவா இருக்கவேண்டும்? இப்படிப்பட்ட மனித சமுதாயமும், அதைத் திருத்தச் சட்டங்களும், அந்தச் சட்டங்கள் மூலம் சிறையும் மரணதண்டனைகளும், எப்போதும், இருப்பதுதான், நியதி—அதை யார் மாற்றமுடியும்—மனிதனுடைய 'இச்சா' சக்திகள் மகேசனால் உண்டாக்கப்பட்டவை—அவைகளை, மாற்ற முடியாது—இப்படியே உலகம் ஒரு சர்க்கஸ் கூண்டாக இருக்க வேண்டியதுதான்—என்று ஒருவரும் வாதாடமாட்டார்கள். உலகத்தில் பாசமும் பந்தமும் சகோதரத்துவமும் அன்பும் நம்பிக்கையும் ஏற்பட வேண்டும் என்பதிலே எல்லோருக்கும் ஆசையிருக்கும்.

இந்த ஆசைகளைச் சொல்லி, மனிதனை நன்னெறியில் செலுத்தவே புத்தர், இயேசு, நபிகள் முதலிய மார்க்கபோதகர்கள் தோன்றினர். அன்பே, சிவம் என்றனர் நமது சைவர்களும். ஆனால், இந்த மார்க்கங்கள்,'மதங்களாகி' பூசைக்குரிய பொருள்களாயின. அந்த உத்தமர்களின் நன்னெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டிய மனிதன், மதநெறியாளர்களை 'பூசை' செய்து விட்டால்போதும் என்கிற கட்டத்துக்கு வந்து, சூடனும் சாம்பிராணியும் காட்டி விட்டால் மோட்சம் கிடைத்து விடும் என்கிற மதவாதியாகி விட்டான்!

இத்தனை பேரும் சாப்பிடுகிறார்களல்லவா? சாப்பிட்ட 'பில்'லை விலைப்பட்டியலைப் பார்த்துத் தாங்களே தீர்மானித்துப் பணத்தை பெட்டியடியில் வைத்து விட்டுப் போவார்களாம்! என்ன அதிசயம்!!

மனிதன் என்கிற நிலையை மறந்தே வருகிறான்!!

இப்படிப்பட்ட சூழ்நிலையில், மனிதனுடைய உள்ளக் குமுறல்களுக்கும் அதன் மூலம் உண்டாகும் பஞ்சமா பாதகங்களுக்கும் காரணம் என்ன, என்று கண்டறிய முற்பட்ட அறிஞர்கள் அநேகம். அகிம்சையே, என் குறிக்கோள்!—என்றார், காந்தியடிகள்.

(2-ம் பக்கம்காண்க



தாங்களே டிக்கட் வாங்கி. தாங்களே அதைக் கிழித்து 'கேட்'டிலுள்ள பெட்டியில் போட்டு விட்டு உள்ளே போய் உட்காருவார்களாம்......

ஆபிரகாம் **லிங்கன்** மனிதனுடைய உரிமைக்காகப் போராடினன், வால்டேரும் ரூசோவும் மனிதன் சுதந்திரத்தை இழக்கக்கூடாதெனச் சொல்லினர், கரிபால்டியும் மாஜினியும் விடுதலையுணர்வைத்தூண்டினர்.

திருவள்ளுவரைப்போல, மனித உலகின் அடிப்பீடத்தை ஆராய்ந்தார் கார்ல் மார்க்ஸ். ஆராய்ந்ததோடு, அதைத் திருத்தியமைக்க வேண்டுமென்ருல் 'மனிதனுடைய தேவைகள்' பூர்த்தி செய்யப்படும் வழிவகைகள் காணப்பட்டாக வேண்டும்—அத்தேவைகள், பொதுவாக அமைக்கப்பட வேண்டும் என்கிற கருத்தைக் கண்டுபிடித்துச் சொன்னவர், **கார்ல் மார்க்ஸ்** அவருக்கு உறுதுணையாகயிருந்தவர், **எங்கெல்ஸ்.**

கனவாகயிருந்ததை நனவாக்கி நடைமுறையில் ஒரு மாபெரும் சமூகத்தையே உருவாக்கிய மாவீரர் **லெனின்.** அவர் வழியில் நடந்து, அதனைக் கட்டிக் காத்தவர், **ஸ்டாலின்.**

* * *

கம்யூனிசம்—என்பது கொள்கையின் பெயர். அதை வைத்து கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்றுக்கே அந்தக் கொள்கைகள் சொந்தம் என்று எண்ணக்கூடாது. கட்சி என்பது, அக்கோட்பாட்டை வளர்ப்போரின் குழுவாகும். அக்குழுவினர்செல்லும்பாதையில்கம்யூனிசக் கொள்கையை எட்டுவதற்காக நடக்கும் வழியில்—வேறுபாடுகளிருக்கலாம். அதன் காரணமாக, மார்க்சும் லெனினும் சொன்ன கருத்துக்களின் புதுமையை, மறுத்தல் இயலாது. அந்த அடிப்படைக் கருத்துக்களை மிகமிகத் தெளிவாக, கம்யூனிஸ்டுக் கட்சி நண்பர்களைப் போல, படித்து, உணர்ந்து, நாட்டுக்குச் சொன்னவர் நமது அண்ணு! மரியாதையும், மதிப்பும் புதுமையும் கொண்டு அப்புனிதர்கள்மீது அன்பு கொண்டவர் அண்ணு! அப்படிப்பட்டவரை வழிகாட்டியாகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகமும், சமூகத்தின் சிக்கல்கள் எப்படி அறுக்கப்படவேண்டும் என்பதில், புதுமைக் கொள்கைகளைக் கொண்டே விளங்குகிறது.

மார்க்சும் லெனினும், இருந்த யுகம் வேறு. அப்போது காலனி ஏகாதிபத்தியத்தின் கொடுமை இல்லை—மத்தியதர வர்க்கம் என்கிற புது வர்க்கம் இல்லை—முதலாளியும் தொழிலாளியும் ஒருவருக்கொருவர் வெட்டிக் கொண்டு மாளாமல், அன்போடு பழகியே திருத்த முடியும் என்கிற சனநாயக முறையின் முழு உருவம் இல்லை. ஆகவே தற்கால நிலைக்கேற்ப, நமது மண்ணுக்குத் தேவையான அளவில், சமதர்ம உரிமைப் பெறவும்--இங்கேயுள்ள சாதிபேதங் கொடுமைகளை ஒழிக்கவும்—வடநாட்டுக் காலனி ஆதிக்கத்தை ஒழிக்கவும், கொடி ஏந்தியிருப்பது, திராவிட முன்னேற்றக் கழகமாகும்!!

* * * *

நாம் விரும்பும் சமூக அமைப்பு எப்படியிருக்கவேண்டும்?---எனக் கேட்போருக்கு, இதழின் தலைப்பிலேயுள்ள ஒரு நகரத்தின் படத்தைப் பார்க்கச் சொல்கிருேம். கருங்கடலுக்கு அருகிலுள்ள **செவஸ்டாபூல்** என்கிற, ரஷ்ய நகரம், அது. அந்த நகரத்தில் நடப்பதுபோல, எல்லாம் நடந்தால், உலகமே பூலோக சொர்க்கமாகும்! அங்கே, ஏமாற்றுதல் இல்லை—எத்திப்பிழைப்பது இல்லை—மனித நெறியின் மணம் வீசுகிறது—ஆசைகள் இல்லை—அடிதடிகள் இல்லை—பொருமை இல்லை—மனிதனைக் கெடுத்து வரும், தீயகுணங்கள் எவையும் இல்லை. எப்படியெப்படி அந்த



செய்திப் பத்திரிகைகளை, காசைப் போட்டுவிட்டு, அவரவர்கள் எடுத்துச் செல்கிருர்கள்..

ஊர் மக்கள் வாழ்கிருர்கள் என்பதை ஓவியரின் படங்கள் தெரிவிக்கும்.

* உழைப்பவன், தன் முதலாளிகளுக்காக உழைப்பதாக எண்ணுவதில்லை. ஏனெனில் அங்கே முதலாளி, இல்லை.

இதனுல், தன் நாட்டுக்காக நாம் உழைக்கிருேம்! நாம் அதிகம் உழைத்தால். நமது நாட்டுக்குவேண்டிய சர்க்கரையும் இரும்பும், அரிசியும் பிறபொருள்களும், அதிகமாகக் கிடைக்கும்!! இவை அதிகமானுல், மக்கள், 'தேவை' என்பது இன்றி, சுகமாக வாழ்வார்கள் என்று எண்ணுகிருன்.

*

இப்படியொரு நல்லெண்ணம் அவனுக்கு ஏற்படக் காரணம் என்ன? நாளைக்கு பணமில்லாவிட்டால் என்ன செய்வது என்கிறபயம் இல்லை, அவனுக்கு. தொழில் வேண்டுமானுல், அரசு கொடுக்கும் என்கிற உறுதி உண்டு. அதிகமான சாமான்களை உற்பத்தி செய்தால், தனக்கு அதிகக் கூலி கொடுப்பதோடு தன்னை அரசு போற்றும் என்கிற நம்பிக்கை யுண்டு. காலோ, கையோ முடமாகிப் போனுல், தன் குடும்பத்தை, அரசு காப்பாற்றும் என்கிற திடமனநிலை இருக்கிறது. அவன் கிழவனுனுல் அவனை அரசு காப்பாற்றும்! அவன் குழந்தை குட்டிகளுக்காகச் சேர்த்து வைக்கவேண்டிய அவசியமில்லை — ஏனெனில், அவன் வீட்டில் ஒரு குழந்தை பிறந்தால், அதைப் படிக்க வைக்கவேண்டியதும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையாகிவிடுகிறது! நாம் எண்ணுகிருேம்—நமது பிள்ளை பி. ஈ. படித்தால் என்சீனியராக வருவானே—எம். பி. பி. எஸ். படித்தால் பெரிய டாக்டராக வருவானே—அப்படி

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

மணி மொழி



இலண்டனிலுள்ள ஐகேட் மயானத்தில்
மார்க்ஸ் சமாதிமீது எழும்பியுள்ள அவரது உருவச்சிலை...

"நாங்கள் தனி உடைமையை ஒழித்துவிட உத்தேசித்திருக்கிருேமென்பதைக் கண்டு நீங்கள் நடுங்குகிறீர்கள். ஆனுல் தற்காலத்திலுள்ள உங்களுடைய சமூகத்தில், மக்கள் தொகையில் பத்தில் ஒன்பது பேரின் தனிஉடைமை முன்பே அழிக்கப்பட்டுவிட்டது. இந்த பத்தில் ஒன்பது பேருக்குச் சொத்து இல்லாமல் இருக்கும் ஒரே காரணத்தால்தான், ஒரு சிலருக்குச் சொத்து இருக்கிறது. எனவே, சமுதாயத்தின் மிகப் பெரும்பாலோருக்கு எத்தகைய சொத்துமிலாத நிலைமையை அடிப்படையாகக் கொண்ட தனி உடைமையை ஒழிக்கவே நாங்கள் உத்தேசித்திருக்கிருேம்"

* * *

தனி [illegible]டைமையை ஒழித்துவிட்டால், எல்லா வேலைக[illegible] நின்றுவிடும்; தனியா[illegible]றையில் காட்டப்படும் ஊ[illegible]க்கம், பொதுத்துறையி[illegible] வராது என்றும் சொல்[illegible]களே? இந்தக் கூற்[illegible]படி பார்த்தால் பண[illegible]த்த சமூகம் எப்போதே பாழடைந்திருக்க வேண்டும்! ஏனெனில், அந்தச் சமூகத்தால் உழைப்பாளிகள் எந்தச் சொத்தையும் அடைவதில்லை. சொத்தை அடைகிறவர்களோ, உழைப்பதில்லை. எனவே, தனியாரின் உழைப்பால், எதுவும் உற்பத்தியாவதில்லை! அங்கும் உழைப்பாளி தான் தேவைப்படுகிருன். எனவே இக்கூற்று தவறு.

* * *

ஒருவர் இன்னெருவரைச் சுரண்டுவதற்கு எந்த அளவுக்கு முடிவு கட்டப்படுகிறதோ, அந்த அளவுக்கு ஒரு தேசம் இன்னெரு தேசத்தைச் சுரண்டுவதற்கும் முடிவு கட்டப்படும், ஒரு தேசத்துக்குள்ளிருக்கும் வர்க்கங்களுக்கிடையேயுள்ள விரோதம் எந்தளவுக்கு மறைகிறதோ, அந்த அளவுக்கு ஒரு தேசத்துக்கும் இன்னெரு தேசத்துக்கும் உள்ள விரோதத்துக்கு ஒரு முடிவு ஏற்படும்.

—பொதுவுடைமைப்பிதா
மார்க்ஸ்

மேதினி போற்றும் மேதினம்!

மே தின விழா

ஆண்டுதோறும், மாதந்தோறும், வாரந்தோறும், நாள்தோறும்; அல்லும் பகலும் உழைத்து உழைத்து உருக்குலைந்துவரும் பாட்டாளி மக்களிடையே மே தின விழாக் கொண்டாடப்படுகிறது. இந்த மே தினம் உழைப்பாளிகள் அனைவருக்கும் உகந்த நாள்! மேதினியெங்கும்

மே தினம் கொண்டாடப்படு:கிறது. உலகின் பல்வேறு நாடுகளிலே, பல்வேறு நகர்களிலே இதே மே விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பெறுகிறது. மாஸ்கோவிலே மே விழா; ஜெர்மனியிலே, பிரான்ஸிலே மே விழா; அமெரிக்காவிலேயும் மே விழா

மாஸ்கோவிலே!

மாஸ்கோவிலே மேவிழா அபரிமிதமான உற்சாகத்தோடு கொண்டாடப்படுகிறது. மாஸ்கோவிலே மே தின விழாவில் ரஷ்யநாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சி கொண்டாடுவர். வீதிகள் எங்கும் தொழிலாளர் ஊர்வலம் வருவர். முதலாளித்துவம் முன்பு தங்களைப் படுத்திய பாட்டினைப் பற்றியும் அதை அறவே ஒழித்து, அதன் கொடுமைகளை முழுவதும் அகற்றிய பொதுவுடமைப்போராட்டத்தைப் பற்றியும் பேசுவர். அப்போராட்டம் தந்த விடுதலைக் கீதங்களை அந்நாட்டு மக்கள் வீதிகள் தோறும் பாடிக் கொண்டு செல்வார்கள்.

பாட்டாளி மக்கள் திராவிடரே!

வயலிலே ஏர் பிடித்து உழும் உழவுத் தொழிலாளி ஒரு திராவிடன்; இயந்திரங்களின் நடுவிலே விஞ்ஞான அற்புதத்தோடு வேலை செய்பவன் திராவிடன்; தறிக்குழியிலே, தாய் நூல் நூற்றுக் கொடுக்க, தனயன் அறுந்து போன நூலைச் சரிப்படுத்த, அருமையான மனைவி தார் சுற்றித்தர இங்ஙனம் குடும்பத்துடனே கும்பிக்காகப் பாடுபட்டுழைக்கும் தறி நெசவாள அன்பன் திராவிடன்தான். கூலிவேலை செய்பவன் திராவிடன்; குப்பைகூட்டும் குப்பன் ஒரு திராவிடன்; மோட்டார் ஓட்டுபவன் ஒரு திராவிடன்; மூட்டை சுமப்பவன் திராவிடன்; வண்டியிழுப்பவன் திராவிடன்; வாழ வீடுகட்டித் தருபவனும் திராவிடனே. காடுகளிலேகட்டை பிளப்பவன் திராவிடன்; பிளந்த கட்டைகளைச் சீவி இழைத்துக் கட்டிலும் நாற்காலியும் மேசையும் செய்து தருபவன் திராவிடன் திராவிடர் செய்யும் தொழில்கள் இவை மட்டுமன்று, இன்னும் பல ஒன்றல்ல, இரண்டல்ல—ஓராயிரம்! தொழில் செய்வோர், திராவிட நாட்டிலிருப்போர், அனைவரும் திராவிடரே!

நாட்டு மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றேழுபேர் தொழில் செய்யும் பாட்டாளிகள்; அந்த நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேரும் திராவிடர்தாம் என்று சொன்னால், அனைவரும் ஒப்புக் கொண்டாக வேண்டும். அத்தகைய திராவிடர்களின் விடுதலைக்காகவே, தொழிலாளர் இனத்தின் விடுதலைக்காகவே திராவிட இயக்கம் பணியாற்றி வருகிறது.

ஆலயங்கள் ஆயிரம்! அன்னக்காவடிகள் மக்கள்!

நாட்டிலே நல்ல நல்ல தேவாலயங்கள் பல இருக்க தரித்திரம் தலைவிரித்து ஆடுவானேன்? பாரதமும், பகவத்கீதையும் இருக்க, பக்தர்கள் அல்லலுறுவானேன், அவதிப் படுவானேன்?

நாட்டிலே ஏராளமான பஜனை மடங்களுண்டு. ஆனாலும் மக்களுக்குப் பசி தீர உணவு கிடைப்பதில்லை, வற்றாத ஜீவநதிகள் இருந்தும், வாழ்க்கையில் மக்கள் வெற்றிபெற முடிவதில்லை. கொஞ்சம் கனமான சாமானைத் தூக்க வேண்டுமென்றால் கூட நாம், 'ராமா, ராமா' என்று சொல்லிக் கொண்டுதான் தூக்குகிறோம். முதலாளி கூலி குறைவாகத் தந்தால், அவனை நோகாமல், ஆண்டவனையே நோக்கி, "ஆண்டவனே, உனக்குக் கண்ணில்லையா? ஏழை படும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ, இது தகுமோ, இது முறையோ?" என்று சொல்லி இறைவனைப் பார்த்து மக்கள் ஏங்குவதைப் பார்க்கிறோம். இந்த விசித்திர நிலையின் மர்மம் என்ன என்ற கேள்வியைத் திராவிடஇயக்கம் அநேக ஆண்டுகளாகக் கேட்டுவருகிறது.

கடவுளைப் பற்றிக் கவலைப்படுகிற நாடு நம் நாடு. ஒரு கடவுளைப் பற்றிக்கூட அல்ல, பல கடவுள்களைப்பற்றி. கடவுள்களின் குடும்பங்களைப் பற்றி, கடவுள்களின் சமூகம் பற்றி! ஆனால் கடவுளைப் பற்றிக் கவலைப்படாத நாடு, இயேசுவைப் பற்றி எண்ணாதநாடு என்றழைக்கப்படும் ரஷ்யாவிலே மக்களைப் பிணிகளோ, பஞ்சமோ வேலையில்லாத் திண்டாட்டமோ அணுகுவதில்லை. இதற்குக் காரணமென்ன? ஏன் இந்த ஏறுமாறான நிலை? இதைத் தான் மேதின விழாவில் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று திராவிட இயக்கம் கேட்கிறது, இந்தக் கேள்வியை வேறு எந்த இயக்கமும் கேட்கவில்லை; கேட்க எண்ணவும் இல்லை; கேட்பார்கள் என்று நாம் கனவு காணவும் முடியாது.

நாம் கேட்கிறோம்; கேட்பது மட்டுமல்ல; கேள்விக்கான விளக்கத்தையும் நம்மால் சுட்டிக்காட்ட முடியும், வரலாற்றுக் கண் கொண்டு, எதையும் ஒப்பிட்டறி



யும் பகுத்தறிவுக் கண்கொண்டு. இயற்கை எழில் நிரம்பிய இடங்கள் எவ்வளவோ உள்ளன கவனிப்பாரற்று, நம் நாட்டில். மேனாட்டவர் தம் நாடுகளில் இத்தகைய இடங்களைக் கண்டால், எவ்வளவோ 'ஓய்விடங்களை' உண்டாக்கிப் பொழுது போக்கிற்கும், உல்லாசத்திற்கும்,இயற்கையழகைப் பருகுவதற்கும், தூய காற்றை உட்கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வர்; பயன்படுத்தி இருப்பர். ஆனால் இங்கோ இவ்வளவு அழகு இருந்தும், ஆர்வந்தரும் சக்தி இருந்தும், கலை உள்ளத்தைத்'தரும் திறமிருந்தும் யாவும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. பருவமும் அழகும் இருந்தும் மணாளன் இல்லாத காரணத்தால் வாடும் விதவை போல, முழுமதியாயிருந்தும் முகில்கள் மறைத்துக் கொள்ள அது ஒளியிழந்து இருட்டைத்தருவது போல, நாடு அவதியுறுகிறது.

இன்னும் ஒரு எடுத்துக்காட்டுத் தருகிறோம், நம் நாட்டு-பிறநாட்டு நிலைகளை விளக்கிட. போர் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. பாரத தேசம் சுதந்திரம் பெற்று பதினான்கு ஆண்டுகளாகின்றன. போருக்கு முன் இருந்த நிலைமைக்கு வந்துவிட்டோம் என்று கூறமுடியுமா? அல்லது போர்க்கால நிலையிலே இருந்தது போலாவது இருக்கிறோமா? இல்லை என்று தானே கூற வேண்டும்? இத்தனைக்கும் நாம் போரில் நேரடியாகப் பாதிக்கப்படவில்லை. பிரான்ஸளவு, ஜெர்மனியளவு பிரிட்டனளவு கூடப் போர் நம்நாட்டைத் தாக்கவில்லை. போரின் காரணமாக நமக்குற்ற தீங்கு பொருளாதாரச் சீர்குலைவு மட்டுமே—இது உலக முழுவதிலும் போரில் ஈடுபடாத நாடுகளுக்கு இருந்து வந்த தீமையேயன்றி வேறல்ல. ஆனால் போரில் மற்ற எந்த நாடுகளைவிட மிகுதியாகப் பாதிக்கப்பட்டநாடு ரஷ்யா என்பதை எல்லோரும் அறிவார்கள். நீப்பர் அணைக்கட்டு ரஷ்யாவின் செல்வம். உலகத்தின் மாபெரும் தொழில் வளத்துக்குக் காரணமான அணைக்கட்டு அது-அதை ஜெர்மானியர் உடைத்தெறிந்தார்கள். ஆனால் போர் முடிந்து சில ஆண்டுகளுக்குள் போரில் அதிகமாக அடிபட்டுத் தளர்ச்சியுற்ற ரஷ்யா அதை மீண்டும் கட்டிவிட்டது. முன்போலவே நீப்பர் அணைக் கட்டு இன்று இலங்குவதைக் காணலாம்.

உண்டு, இல்லை

நம் நாட்டில் இயற்கை வளம், இயற்கை எழில் கவனிப்பாரற்று கிடைக்கிறது என்று குறிப்பிட்டேன். இயற்கை வளமிருந்தும் இந்த நாட்டிலே இருக்கிற பஞ்சம், பற்றுக்குறை போல எந்த நாட்டிலும் இல்லை! இந்த நாட்டிலே உள்ள உழைப்பாளிகளைப் போல வேறு எந்த நாட்டிலும் உழைப்பாளிகள் இல்லை. இந்த நாட்டிலே உழைப்பாளிகளுக்கு உழைப்பும் கிடைப்பதில்லை. உழைப்பவர்களும் உழைத்த உழைப்புக்குத் தக்க ஊதியமும் காணுவதில்லை. மற்ற நாடுகளை

விட இங்கு உழைப்புக்குக் குறைவான பலனே கிடைக்கிறது.

இயற்கை எழில் உண்டு. ஆனால் தொழில் வளமும் வாழ்க்கை வளமும் இல்லை. உழைப்பு உண்டு, ஆனால் பலன் இல்லை. திறமையுண்டு, ஆனால் வெற்றி இல்லை, இப்படியாக "உண்டு, ஆனால்; உண்டு, ஆனால் இல்லை." என்ற பட்டியலைத்தான் நாம் ஓய்வொழிவில்லாமல் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதனால் நாம் இறுதியாக மொத்தத்தில் விசித்திரம் வேதனை ஆகியவைகளைத்தான் விளைவுகளாகக்காண நேரிடுகிறது. விசித்திரம் வியப்பை மட்டும் ஊட்டவில்லை; வேதனையைப் பெருக்குகிறது. வேதனை வியப்புக்கு விளக்கம் தரவில்லை; மாறாக அதை வளர்க்கிறது. மேன் மேலும் வியப்பு வேதனையை வார்த்து அதனை வளர்க்கவே காண்கிறோம்.

திராவிட இயக்கம் தொழிலாளர்களின் மூச்சு

தொழிலாளத் தோழர்களின் தொல்லைகளைப் பற்றி சோஷலிஸ்டுகள் ஓய்வு நேரத்திலே விசாரிப்பார்கள். கம்யூனிஸ்டுத் தோழர்கள் தொழிலாளர்களின் பிரச்னையைப் பற்றிப் பேசுகிறார்களென்றால், அது அவர்களுக்கு இரண்டாவது தரமானது தான். காங்கிரஸ் கட்சியோவெனில் தேர்தல் காலங்களில் தான் தொழிலாளர்களைப் பற்றி நினைக்கும், திராவிட இயக்கம் ஒன்றே அவர்கள் நலனில், வாழ்வில் ஓயாது கவலை கொண்டு கவனம் செலுத்தி வருகிறது.

கம்யூனிஸ்டு — சோஷலிஸ்டுத் தோழர்கள் தொழிற்சாலையிலிருந்து அதன் வாசற்படியைத் தாண்டும் வரை தான் தொழிலாளர்களின் வாழ்வில் கிளர்ச்சி செய்ய முடிகிறது. அக் கிளர்ச்சியின் பயனாய் அவனுக்குப் பத்தணாக்கூலி, பன்னிரண்டு அணாவாக உயர்ந்தது, உயர்த்தப்பட்டது என்று வைத்துக் கொள்வோம். அக் கூலியை வாங்கிக் கொண்டு, தொழிலாளி வாசற்படி தாண்டி வெளியே வருகிறான். வழியிலே... ஆல்மரத்துப் பிள்ளையாருக்கு இரண்டு அணாவுக்குக் கற்பூரம் வாங்கிக் கடவுளை வழிபடுவான், ஏனென்றால், "ஆண்டவனை நம்பு, அல்லல்கள் தீரும்; ஆலவாய் அப்பனை நம்பு, அய்யன் உன்னைக் கைவிட மாட்டான்" என்ற நல்லுரைகளையே அவன் கேட்டிருக்கிறான். அத்தகைய தொழிலாளியைப் பார்த்துத் திராவிட முன்னேற்றக் கழகம் கூறும், பகுத்தறிவுக்குகந்த அறிவுரையை!

"இரவென்றும், பகலென்றும் பாராது உழைத்து, உழைத்து உருக்குலைந்த பாட்டாளித் தோழனே! இந்த இரண்டணா உயர்வுக்காக எத்தனை தடியடிகளைத் தாங்கியிருப்பாய்! எத்தனையோ தொல்லைகளுக்கிடையே, அல்லல்களின் எல்லையிலே பெற்ற இரண்டணாவைக் கொண்டு கற்பூரம் வாங்கிக் கொளுத்தினால் ஒரு அப்பனும் ஏற்க மாட்டாரே; ஆலவாய் அப்பன் எப்படி ஏற்பார்?

"ஆலமரத்துப் பிள்ளையாருக்குக் கற்பூரம் வாங்கிக் கொளுத்தும் பணத்தைக்கொண்டு, ஆரஞ்சுப் பழம் என்பதையே கண்டிராத உன் அருஞ்செல்வனுக்கு ஆரஞ்சுப்பழம் வாங்கிக்கொடு; பிள்ளையாருக்குத் தேங்காய் பழம் வாங்குவதற்குப் பதிலாக, உன் பிள்ளை படிப்பதற்குத் தேவையான கற்பலகை, புத்தகம் ஆகியவை வாங்கிக்கொடு" என்று நாம் அறிவுரை கூறுவோம்.

நல்வழி காட்டும் தோழன்

தொழிலாளர்கள் கூலி உயர்வோடு மற்ற கட்சிகள் நின்றுவிடுகின்றன. அந்தக் கூலியை அவன் எப்படிச் செலவு செய்கிறான்; கூலி உயர்வு பெறுவதால் அவன் வாழ்வு வளம் பெறுகிறதா அல்லது அதன் மூலம் வாழ்வுக்குக் கேடான நச்சுச் செலவுகள் பெருகுகின்றனவா என்பன பற்றி அவை கவலைப்படவோ, சிந்திக்கவோ, அவ்வகையில் தொழிலாளருக்கு அறிவுரை கூறவோ, இடித்துரைக்கவோ, அவனுக்காக அத்துறையில் போராடவோ செய்வதில்லை. ஆனால் திராவிட இயக்கம்---திராவிட முன்னேற்றக் கழகம் அவன் சம்பளம் வாங்கும் தொழிற்சாலையிலிருந்து, அதன் வாசற்படி கடந்து, அவன் வீடு வரையில் உடன்வந்து உதவி, அவன் நலங்களைக் காக்க முனைகிறது. குடும்ப வாழ்வில் அவனுடனிருந்து உதவி புரிகிறது. அவனுடன், அவன் மனைவி மக்களுடன் திராவிட முன்னேற்றக் கழகமும், அது தரும் அறிவுரையும், அனுபவ அறிவும் கோயில், குளத்திற்குச் செல்லுகிறது. நாடகக் கொட்டகை, படக்காட்சி அரங்குகளுக்குச் செல்கிறது. அவன் பிள்ளைகளுடன் பள்ளிக்குச் செல்கிறது. எங்கும் எப்போதும் அது அவன் வாழ்க்கைக்கு உற்ற வழி காட்டியாய், அவன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் ஒப்பற்ற நண்பனாய் இருக்கிறது,

ஓய்வில்லா உழைப்பு, அலைச்சல் ஆகியவற்றின் காரணமாக, தொழிலாளி இரவிலே கனவு காண்பான். கனவில் ஐந்து தலை படைத்த நாகத்தின் மீது ஆண்டவன் தோன்றினார் என்று அவன் தன் மனைவியிடம் கூறுவான். உடனே அம்மையார் 'ஓ, அதுவா ஐந்து மாதங்களுக்கு முன் உயிர் நீத்த நமது குழந்தை தான் கனவு ரூபத்திலே வந்திருக்கிறது. பெரிய பாளையத்து அம்மாளுக்கு, கோழியறுத்துக்காவு கொடுக்க வேண்டும்" என்று கூறுவார். அந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகம், "அப்பா தொழிலாளத் தோழனே, கனவு ஏற்படுவதற்குக் காரணம் அஜீரணம், அதிக உழைப்பு, அதனால் ஏற்படும் அயர்ச்சி, தெளிவில்லா உள்ளம், அதன் அதிர்ச்சி ஆகியவைதான். ஆகவே தோழனே, கவலைப்படாதே. சற்று நல்ல ஓய்வு எடுத்துக் கொள். பெரிய பாளையத்து அம்மன் காவுக்குச் செலவு செய்யும் தொகையைக் கொண்டு பாலும் பழமும் வாங்கிச் சாப்பிடு. அதில் மனைவிக்கும் குழந்தைக்கும் கொஞ்சம் கொடுத்தால் கூடக் கேடில்லை. தேவைப்பட்டால் ஏதாவது நல்ல டானிக் வாங்கிச் சாப்பிடு. அல்லது டாக்டரைப் போய்ப் பார்" என்று கூறும்.

பழைமை மாயை

நாங்கள் இந்த அறிவுப் பிரசாரம் செய்யும்போது தொழி

(9-ம் பக்கம் காண்க)

அண்ணாவின் பெருமை!

-0-

எங்கேயுண்டு இவர் போல்

—0—

'அந்தநாள்' சம்பத் பேசியது !!

"அறிஞர் அண்ணா அவர்களின் பொன் விழா கொண்டாடுகிற இந்த நேரத்தில் 20 ஆண்டுகளுக்கு முன் என் நினைவு செல்கிறது. இருபதாண்டுகளுககு முன் அண்ணா அவர்கள் ஈரோட்டுக்கு வந்தார்கள். அப்பொழுது நான் மிகச் சிறுவனாக இருந்தேன். அன்றே அண்ணா அவர்கள் எனக்கு அண்ணனானார்கள். அதன் பிறகுதான், அரசியலும் வரலாறும், ஆழ்ந்த பொருளாதாரமும், அறிந்திருந்த அண்ணன் நமக்குக் கிடைத்திருப்பதை உணர்ந்தேன். என்னுடைய அண்ணன் தமிழகத்தில் புகழ் படைத்த—தமிழகத்தின் நம்பிக்கைக்குரியவர்—சிறந்த ஆற்றலும் பண்பும் உடையவர் என்பதைத் தெரிந்தபின் நான் வளர்ந்தேன்! அண்ணனால் கிடைத்த பயிற்சியால் நானும் அண்ணனுக்குத் துணை நிற்க முடியும் என நினைத்து வளர்ந்தேன்! இப்படிப்பட்ட அண்ணனை நான் எப்படிப் பாராட்டுவது?

"அண்ணனுக்கு 50 ஆண்டு நிறைவதை நினைத்து என் அன்பை—இனம் தெரியாத ஒரு இன்பத்தை வெளிப்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு எங்ஙனம் வாழ்த்துவது?

"அண்ணா அவர்களை வாழ்த்திப் பேசுவதென்றால் முடியாது. அண்ணா அவர்களை இங்கே அமரச் செய்து, அவர்களை நாம் அனைவரும் உற்றுப் பார்த்தால் கூடப் போதும்: அதுவே நமது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதாகும்.

"அண்ணா அவர்களைப் பற்றி நாம் பாராட்டுவதைவிட மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்கள் பாராட்டுவதிலேதான் நாம் மகிழ்ச்சியடைகிறோம். அண்ணா அவர்களையும் நமது கழகத்தையும் அடிக்கடி இழிவாகத் தாக்கிப் பேசுபவர்களெல்லாம் அண்ணா அவர்களை இன்று புகழ்வதைக் காண்கிறோம். அண்ணா அவர்கள் பக்கத்திலே நாம் இருப்பதால் அமைச்சர் பக்தவத்சலம் போன்றவர்கள் அண்ணா அவர்களின் ஆற்றலைப் புரிந்து கொண்ட அளவு நம்மால் புரிந்துகொள்ள இயலவில்லை; அதனாலேதான், பக்தவத்சலம் போன்ற மாற்றார் பாசறையிலிருப்போர் பாராட்டும் போது நம் உள்ளம் புளகாங்கிதமடைகிறது,

"நாம் இன்று கொண்டாடுகின்ற பொன் விழா தனிப்பட்ட ஒருவருக்குக் கொண்டாடும் விழா அல்ல; ஒரு ஸ்தாபனத்தினுடைய பொன் விழாவாகும், அண்ணா ஒரு தனி மனிதரே அல்ல—அவர் ஓர் ஸ்தாபனம். நமது எதிர்காலத்தைப்பற்றி மனக் கோட்டைக் கட்டிக் கொண்டு நடமாடும் உருவமாக அண்ணா காட்சி அளிக்கிறார்.

"பெரியார் அவர்கள் பிறந்த நாளும், அண்ணா அவர்களின் 50-வது ஆண்டு நிறைவு வாரமும் இணைந்திருப்பது மிகப் பொருத்தமாகும். பெரியார் அவர்கள் சமுதாயத் துறையிலே பகுத்தறிவையும், அரசியலிலே விழிப்புணர்ச்சியையும் தூண்டினார். பெரியார் அவர்கள் தூண்டிய உணர்ச்சியிலே பழுது உண்டானபோது அதை நீக்க ஆள் தேடினோம், அப்பொழுது அண்ணா வழி காட்டினார்.

"அண்ணா காட்டிய வழி ஒரு மிகப் பெரிய சாதனையாக இன்று வளர்ந்தோங்கி வந்திருக்கிறது.

அண்ணா அவர்களுக்கு, தாம் சாதித்த சாதனைகள் மீதே அதிருப்தி! தாம் சாதிக்க வேண்டிய காரியங்கள்மீது அதிருப்தி! தாம் சாதித்த மிகச் சிறிது—சாதிக்க வேண்டியது இன்னும் அதிகம் இருக்கிறது' என்று அவர் கருதுவதால்தான், தமது சாதனைமீது அதிருப்திப்படுகிறார். இவ்வளவு பெரிய காரியங்களைச் சாதிக்கத் துணிந்த அவருக்குச் சலிப்போ உற்சாகக் குறைவோ ஏற்பட்டதால் அதிருப்திக்

(9-ம் பக்கம் பார்க்க)

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி 1 வெள்ளி 5-5-61 கதிர்-9

அரசியல் முதலாளிகள்

முன்பெல்லாம் முதலாளித்துவம் சீறும், சினம் கொள்ளும், தாண்டும், தடிகொண்டுதாக்கும், உதைக்க வரும், உறுமும்.

இப்போது, முதலாளித்துவம், அந்த வழிகளைவிட மிகமிகச் சாதுரிய வழியில், தன் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முனைந்து வருகிறது.

அந்த வழிகளில் ஒன்று, வளரும் முற்போக்குக் கொள்கைகளைச் சார்ந்தவர்களில் சபலமனம் கொண்டவர்களைத் தேடிப்பிடித்து, அவர்தம் பைகளை நிரப்பி, தனது எதிரிகளை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் விரட்டி விடுவது! இந்த முயற்சியில், இந்திய முதலாளித்துவம், இன்றையதினம், நல்ல பலனையும் கண்டு வருகிறது!!

* * *

பண்டித நேரு அவர்களைப் போன்ற நல்ல சமதர்மவாதிகளைக் கண்டிருக்க முடியாது! ரஷிய நாட்டின் சாதனைகளையும், மார்ச்சு, லெனின் பாதைகளையும் கற்றுத் தோந்தவர் மட்டுமின்றி, அவைகளைக் கடைப் பிடித்தாலே ஒரு நாடு முன்னேறும் என்கிற அளவுக்கு, ஒரு காலத்தில் எண்ணியவர் அவர். ஆட்சிக்கு வந்தபிறகு, அவரால் அந்த எண்ணத்தை நிறைவேற்ற முடிந்ததா என்றால், இல்லை! நிறைவேற்ற முடியாதது மட்டுமல்ல நீண்டதொரு ஆலமரம் சாய்ந்தது போல, முதலாளிகளின் புன்னகையை நம்பியும்—அதேசமயம் தொழிலாளிகளின் ஒட்டுகளைப்பெற அவர்களுக்கு நன்மை செய்வது போலப் பேசியும், இருநாக்குடன் உலவும், இக்கட்டான நிலைமைக்கு, ஆளாக்கப்பட்டு விட்டார்! தேர்தலுக்கு நிதி உதவுதல்—தன் வசமிருக்கும் பத்திரிகைகளின் பிரச்சாரபலம்—பாசத்தோடு பழகுதல் போன்ற, தன்மைகளின் மூலம், நேரு போன்ற நித்தில மணிகளையே வீழ்த்திவிட்ட முதலாளித்துவத்துக்கு, நெருஞ்சி முட்களை எடுத்துப்பையில் போடுவதா, கஷ்டம்!!

* * *

பெரியவனாகி விட்டான்—செல்வாக்கு வளருகிறது—அவன் குரலுக்கு மதிப்புண்டு—அவன் விரலசைத்தால் பாட்டாளிகள் எழுவர்! என்பதை முதலாளித்துவம், முன்பெல்லாம் கண்டால், அத்தலைவனை, அடக்குமுறையால் பணியவைக்கவே முயலும். அவர்களை வளர்த்தத் தலைவனையே நேசமாக்கி, பாசங்காட்டி, தங்கள்வலையில் வீழ்த்திவிடுவது என்கிற சாகசமான செயலை, மிகமிகச் சாதுரியமாகச்செய்ய ஆரம்பித்திருக்கிறது. அப்படி வீழ்த்த, சில சமயம், இரும்புப் பெட்டியையும்; சில சமயம் வஞ்சகப்புத்தியையும்; முதலாளிகள் சாதனமாகக் கையாளுகிறார்கள்.

"என்னப்பா, குப்பா! உங்கதலைவன், மாடிவீடு வாங்கிவிட்டானமே...'

"அப்படிங்களா?"

"அட, போப்பா! நான் ஒரு வீடு வாங்க இருந்தேன். அந்த வீட்டை அவன் விலைக்குப் பேசி, தன் பெயரிலிருந்தால் தப்புவரும் என்று தன் பெண்டாட்டியோ தங்கச்சிக்குப் புருஷனுடை தம்பிப்பேருக்கு வாங்கி எழுதிவைத்திருக்கிறான்...

"இது நிசங்களா! எனக்குத் தெரியாதே..."

"ஐயோ, பாவம்! அப்பாவி, உனக்கு எப்படித் தெரியும்? இப்படித் தான் உங்களையெல்லாம் ஏமாற்றி அவன் பணம் சம்பாதிக்கிறான்..."

குப்பன், ஏமாந்தவனாயிருந்தால், வலையில் வீழ்வன்! அவனெல்லாம் செய்யும் போது நமக்கென்ன என்று எண்ணுவான்! பணம், கைமாறும். இரண்டு நாளைக்கெல்லாம் ஒற்றுமையாயிருந்த கட்சி, இரண்டுபடும், குப்பனுக்கு நல்ல விளம்பரம், பத்திரிகைகளில் அளிக்கப்படும், அவன் கரடியாய்க் கத்தினாலும். கால்வரிபோடாதவர்கள், 'கர்ச்சனை' முழக்கம்!' எனப்போடும், பெரிய பெரிய தலைவர்களை, குப்பன் சந்தித்தார்! என்கிற பாபரப்பு உண்டுபண்ணப்படும். தன்னுடைய திட்டம் பலிக்கின்ற வரையில் இந்தத்தித்திப்பை நாவில் தடவி, வீரனைத்தன் காலடியில் தள்ளிவிடும்.

* * *

நம்முடைய சமுதாயம், பொதுவாகவே பலவீனமானது! அதிலும் பணம் என்றால், அந்த ஓசை நயம் கேட்டு, முற்றும் துறந்தோர் கூட பழையபடி பற்றும் பந்தமும் பெற்றார்களென்றால், குடும்பம் என்கிற அலைகடல், ஆசைகள் என்கிற திமிங்கலங்கள் அவனைப் போல வாழவேண்டும் என்கிற ஏக்கம் எனும் ஈட்டிகள் பாயும்போது, சபல மனம்கொண்டவன், "ஆகா! இதுவல்லவா நல்வழி. இவ்வளவும் கிடைக்கும் போது, என்னமோ, கூட்டத்தோடு சேர்ந்து குத்து,அடி, உதை என்று பட்டுக் கொண்டிருப்பது. புகழும் கிடைக்கப்போகிறது! வாழ்வும் வசதியாக அமையப்போகிறது!! இதை விடுவானேன்?' என்றுதான் எண்ணுவான் இந்தப்பலவீனத்துக்குப் பலியாகாமல், கொண்ட கொள்கைக்காக உயிரையும் விட்டு, உதைபட்டு' அடிபட்டு, கட்சியை வளர்ப்போர் இருக்கிறார்கள்!

ஒவ்வொரு நாளையும் கழிப்பது ஒவ்வொருயுகம் என்று எண்ணும் இழிகேடான நிலையிலும், கோடி பொன் கொடுத்தாலும், தூ, என்று காறித்துப்பும் தொண்டர்கள், இவர்களை!! விலைக்கு வாங்கவோ கொள்கைமாறச் செய்யவோ. ஆண்டவன் என்கிறார்களே, அவனாலும் முடியாது. ஆனால், உழைக்காமலே வாழவேண்டும், அந்தச்சீமானைப் போல நாமும் நம் குடும்பமும் இருக்கவேண்டும், நம்முடைய அண்ணன் தம்பி சொந்தக் காரர்களைப்போல் நாமும்மாடி வீடுகளைக்கட்டவேணடும், என்கிற ஆசைக்குப் பலியாகும் 'பூர்ஷ்வா'ப்புத்தியை இழக்காமல்—பொதுவாழ்க்கையிலீடுபட்டபோதும் 'பூர்ஷ்வா' குணத்தோடு நடந்து கொண்டிருந்த—போலிகள், சீக்கிரம், காசொலிக்குக் கரம்கூப்பி வணங்கி விடுவார்கள்! அந்த நிலைவரும் போது, தாங்கள் மனச்சாட்சி—தோழர்கள்—சொன்ன கொள்கை எல்லாவற்றையும் தூ வென்று மிதிக்கும் அளவுக்குச் சென்று விடுவார்கள். "செச்சே! நான் இருந்தது, கட்சியா? அந்தக் கட்சியை நடத்தியவர்—'இர்' என்று சொன்னேன்! சேச்சே! 'இன்'போடுங்கள்—நடத்தியவன்' ஒருதலைவனா?", இப்படி, வார்த்தைகள் மாறும். ஓங்கி ஒரு போடுபோட்டால்—அதுவும் உரத்துப் போட்டால்—பத்திரிகை பலத்தை முதலாளிகள் வழங்கும் சந்தர்ப்பத்தில் போட்டால்—பலர் நம்பாவிடினும்,சிலராவது நம்பமாட்டார்களா! மக்கள் நம்பாவிடினும்,மறைவிலிருந்து ரசிப்பவர்கள் மனம் திருப்தியானால். அதுவும் இலாபம்தானே!!

* * *

இரண்டாம் படிக்கட்டிலிருக்கும் காங்கிரசு தலைவர்களில்பலரை, இப்படித்தான் இந்திய முதலாளித்துவம் விழ்த்தியிருக்கிறது. அதனால்தான், காங்கிரஸ்மேலிடத்திலேயே, இன்று கருத்துவேற்றுமை நேரு பண்டிதருக்கும் மொரார்ஜி தேசாய்க்கும் ஏற்பட்டிருக்கிறது. நேரு நினைக்கிற அளவுக்கு முற்போக்கான போக்குகளை மொரார்ஜி நினைக்கவில்லையாம், கொஞ்சம் 'முதலாளித்துவ வாடை' யுடன் நடக்கிறாராம். இதனால், தனக்கு அடுத்தத் துணைப்பிரதமர் பதவியில் மொரார்ஜியை வைக்க பண்டிதநேரு விரும்பவில்லையாம். இரண்டு பக்கமும் சாயாமல் நடுநிலையுடன் இருந்து வரும் தன்போக்குக்கு, மொரார்ஜி ஊறு செய்துவிடுவார் என்று உளமார நம்புகிறாராம். இதெல்லாம் நாம் சொல்லவில்லை! 'சிம்சன்' முதலாளியின் "மெயில்" ஏடு செப்புகிறது!! நேருவுக்கும் மொரார்ஜிக்கும் தகராறுவரும்—என்று யூகமும் சொல்கிறது. சம்பத்தின் விஷயத்தில், இந்த "மெயில்" ஏடு நடந்து கொண்டவிதத்தைப் பார்ப்போருக்கு, முதலாளித்துசாகசத்தின் முழுஉருவமும் தெரியும். யூகத்தைப் போடுவது—இதை இரண்டு தலைவர்களும் படிப்பார்களல்லவா—அதன் மூலம், அடுத்த முறை இருவரும் கூடும்போது ஒருவரையொருவர் சந்தேகத்துடனேயேப் பார்க்கும் படியான சூழ்நிலையை உண்டு பண்ணுவது—இப்படித்தகராறை வளர்ப்பது--என்பது எவ்வளவு சாகசமான வேலை!! நேரு பண்டிதர், கியூபா, காங்கோ பிரச்னைகளில் அமெரிக்காவைஆதரிக்கவில்லை.தன்னை ஆதரிக்காவிடில்,அமெரிக்க முதலாளித்துவம், இந்திய முதலாளித்துவத்துக்குப் பணம் கொடுக்க முன் வருமோ! பணமும் தொடர்பும் இல்லாவிடில், பேரிழப்புதானே? இப்படியொரு நேருக்குப்பதில், 'ஆமாம்' போடும் மொரார்ஜி வந்தால், இலாபம் தானே! அப்படியே வரமுடியா விட்டால், மொரார்ஜியைத் தனியாகப்பிரியச் செய்து—ஒரு கட்சி அமைக்கச் சொல்லி—அதற்கு ஊட்டம் கொடுத்து—அதைத் தங்கள் எடுபிடியாக்கி—அதன் மூலம் நேருவுக்கு எதிர்ப்பைக் கொடுக்கலாமன்றோ?

* * *

தின்று விட்டுச் சும்மாயிருக்கிறவன் மூளை சும்மாயிருக்காது என்பார்கள்! அதற்கு, நல்ல உதாரணம், இன்றைய முதலாளித்துவம் தான்!!—நேரு, சாதகமாயிருக்கும் வரை, அவர் மாறினால், இன்னொருவர். இப்படி, அரசியலை, தன் சதுரங்கமாக்கிக் கொள்ளும் வேலையைச் சாதுரியமாகச் செய்து. வருகிறது.

"வடநாட்டு முதலாளிகள் தென்னாட்டில் வந்து ஆலைகளை-ஆரம்பிக்கலாம்!"—என்று சொல்கிறவரா, சம்பத்?

"என் கட்சிக்குச் சமதர்ம நோக்கம் கிடையாது?", எனச்சொல்லக் கூடியவரா, பழைய சம்பத்?

"இந்தியத் தேசீயம்!" என்கிற வார்த்தையை ஏற்றுக்கொள்ளக் கூடியவரா, சம்பத்?

"பிரிந்து போகும் உரிமை உண்டு எனறு சொன்னால் போதும் தனியாட்சி, வேண்டாம்" என்று பழைய சம்பத்தின். கால்விரல், ஒப்புமா இதனை?

சம்பத் விஷயத்தில் மட்டுமல்ல, எந்த முற்போக்கு இயக்கத்தைச் சிதைக்கவும் முதலாளித்துவம், திட்டமிட்டே வேலை செய்கிறது! சிலர் சொல்வதுபோல, சம்பத்தும் பணமுதலைகளும் தினசரி சந்திக்கிறார்கள்—டெலிபோனில் பேசுகிறார்கள்—என்பதை, நமது நெஞ்சம் ஒப்புக்கொள்ளவில்லை. அந்தளவுக்குப்பண ஆசையிலாதவரா-கொடுத்தாரா, நம் கழகப்பணத்தை எல்லாம் பணநாதன் அருள்!—என்று நம் தோழர்கள் கூறுவதையும், ஒப்புக் கொள்ள நம் இதயம் தயங்குகிறது, இருக்காது, என்றே நாம், நம்புகிறோம். அப்படியெதுவும் இல்லாமலிருந்தால்; இன்னும் சாதுரியமாகச் சம்பத்தை, முதலாளித்துவம் மயக்கி விட்டது, என்றே பொருள்! அந்த விஷயத்தில்' அவர்கள் வலைவீச்சு, நல்லபலனை—ஒரே நாளில்—அளித்திருக்கிறது!! அடடடா எவ்வளவு தலைகீழ் மாற்றம்—வடநாட்டு முதலாளிகளுக்குத்தாம்பூலம்—சமதர்மக் கொள்கைக்கு முழுக்கு—அகண்ட தேசீயத்துக்கு வக்காலத்து, நம்பவாமுடியும், யாராலும்.

முதலாளித்துவம், இந்தளவுக்கு, ஒரு கட்சியை இரண்டாக்கச் சதி செய்கிறதென்றால், அக் கட்சியைக்கண்டு அது அஞ்சுகிறது, என்றே பொருளாகும், அப்படி அஞ்சக்காரணம், அக்கட்சியின் வளர்ச்சியே அந்தவகையில் நாம், மகிழத்தான் வேண்டும்! இது ஒரு

(8-ம் பக்கம் பார்க்க)

குயிலே ! கோட்டானாகலாமா !

அ. சதாசிவம்.

பகுத்தறிவு ஒளி வீசும் சந்தனப் பொதிகையில் பிறந்து 'முல்லை'யின் மணத்தைத் 'தென்றலோடு வீசிய கவிஞர் கண்ணதாசனாரே!

தாங்கள் எழுதிய கதை முடிந்தது. கட்சிப் பிறந்தது எனும் கட்டுரையைக் கண்டோம். என்ன என்ன எண்ணியிருந்தோம் தங்களைப் பற்றி, அவை யாவும் பொய்யெனக் கூறிடத் தக்க விதமாய் அன்றோ எழுதியுள்ளீர். புதுக் கட்சியில் தோன்றியதாலோ, புதுக் கொள்கையை மேற்கொண்டதாலோ, இதை எழுதவில்லை,

அக்கட்டுரையில் அறிஞர் அண்ணாவை, திரு. அண்ணாத்துரை யென எழுதியிருந்ததைக் கண்டு கண் கலங்குகின்றோம். 'அறிஞர்' எனக்கூறிட வேண்டாம். 'அண்ணா' என்று அழகாக அன்பார்ந்த மொழியால் கூப்பிடக்கூடவா அருகதையற்றவராகிவிட்டார்? அவ்வளவு இழிந்த நிலைக்கா அந்த மாமேதை சென்றுவிட்டார்? மாற்றார் விளித்திருந்தால் துளியும் கவலைக் கொள்ளோம். ஆனால்,

குலமுறை 'அண்ணா' யென்னும்
கொடிநிழல் தலைவா யென்னும்
கலைமனம் அறிவே யேன்னும்
கவிக்குரல் 'புலவா' யென்னும்
அலைத்தமிழ் 'உயிரே' யென்னும்
அவனியே 'புனிதா' யென்னும்
தலைமுறைக் கிவரல் லாது
தலைவரென் றொருவ ரில்லை!

என்று எந்த வாய் இன்பத் தமிழில் சிங்காரமாய் பாடியதோ அதே வாய் இன்று, திரு. அண்ணாத்துரை யெனக் கூறின் எப்படி நம்புவது? எங்ஙனம் கவிஞரே மனம் எழுதத் துணிந்தது? எழுதும்போதே கை நடுங்கியிருக்குமே!

தலைமுறைக்கு அவரன்றி தகுந்த தலைவர் வேறொருவரில்லையென அறுதியிட்டு உறுதியுடன் கூறியதும் பொய்யோ?

அன்றொரு நாள் இலங்கையிலிருந்து வெளிவரும் தினகரன் ஏட்டு வாசகர்கள் கேள்விக்கு விடையளிக்கும்போது ஒரு வினாவுக்கு...

"எல்லோருக்கும் நான் தலைவனாக இருக்க ஆசைப்படுகின்றேன்; ஆனால் ஆயுள் காலம் முழுவதும் அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தொண்டனாகவே இருக்க ஆசைப்படுகிறேன். அவரைப் பற்றி என் கருத்து என்ன என்பதற்கு இது போதாதா?" எனக் கூறினீரே. இன்று தலைவராக அல்ல; 'அண்ணா' வாகக் கூடவா ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த அளவா அறிஞர் பிரான் கெட்டுவிட்டார்? கீழ் நிலைக்குச் சென்றுவிட்டார்? தூசளவுகூட மாசில்லாத அவரையா கூறுகின்றீர் அங்ஙனம்! தயாக்கும் தான் பெற்ற தனயனுக்கும் தகராறுவந்து பிரிந்துச்சென்ற பின். தாயை தாயெனக்கூடவா கூறிடக்கூசுகின்றது வாய்? அனவனை மக்கள் எங்ஙனம் மதிப்பர் சிந்தித்துப்பாரும்!

எதையென்று சொல்வது கவிஞரே! சிந்தையெல்லாம் இனிக்கும் சிங்காரச் செந்தமிழ் வித்தகனைப்பற்றிப் பாடியது!

முகத்தினிலே ஒளியி ருக்கும்
முல்லையிலே மணமி ருக்கும்
மொத்த மாயி ருக்கும்—என் அண்ணா
மொழிந் திடும் ஒருவார்த் தையில்.

அகில உலகத்திற்கும் அருந்தமிழகத்தின் வளத்தைக் கூறிச் சரித்திரத்தில் அழியாத புகழ் பெற்ற தமிழகத்தின் முத்து பொய்யோ? முல்லை மணமும் பொய்யோ கவிஞரே?!

தமிழ் இலக்கியத்தில் உள்ள இன்னா நாற்பதிற்கு இணையாகப் பார் என் 'அண்ணா' நாற்பது எனப் பாடியதும் கனவா? நனவா? அவற்றில் தங்கள் சிந்தனைக்குச் சில:

உள்ளத்தாற் பொய்யாத
—உயர்நிலை ஒன்று
... ...
அள்ளத்தான் குறையாத
—கருத்தோட்டம் ஏழு
அறிஞர்க்கோர் வழியென்னில்
—மெய்வாழ்வு எட்டு
... ...
அங்கத்தின் அசைவுக்குள்
—அரசியலின் தேக்கம்
அணுவுக்குள் அணுத்தேடும்
—ஆராய்ச்சிப் பாக்கம்
... ...
தங்கத்தின் வைரத்தின்
—நீரோட்டம் பார்க்கும்
தன்மைத்தாய்த் தமிழ்கற்ற
—பேராளன் எங்கள்
அங்குத்தாற் றலையான
—அண்ணாவின் பெருமை
அறிவுக்கோர் வீடாக
...இருபத்தி நான்கு!
... ...
தமிழ்காக்கும் செயலோடு
—முப்பத்தி ரண்டு
... ...
தென்னாட்டின் அன்பெல்லாம்
—துயில்கொள்ளும் நெற்றி
அகம்பற்றி உரைத்தாற்கோர்
—அழகான வார்த்தை
அய்யய்யோ உலகத்தில் இனும்
—தோன்ற வில்லை
யுகம்தேய்ந்து போனாலும்
—பெயர்நிற்கும் மென்றால்
ஒருவர்க்கே அண்ணாவென்
—றுரை நாற்ப தென்ப!

*

அறிஞர் அண்ணாவின் பொன் விழாக் கூட்டத்தில் பேச முடியாது மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினீரே. அம்மனமா கூறுகிறது அண்ணாத்துரை என்று!

பொன்விழா தென்றல் மலரில் ஒரே தலைவரென மகுடமிட்டுப் பாடினீரே.

ஆண்டுக்கொரு புதுமைத் தரும்
அறிவுத் திருமாறன்
ஆட்சிக்கொரு வழிகூறிடும்
அரசுக் கலைவாணன்!
மீண்டுந்தமிழ் முடி சூடிட
விரையும்படை வீரன்
மீட்சிக்கென வேல் தாங்கிய
வெற்றித் தமிழ்வேந்தன்.

செம்பொன்மணி யாரத்தொடு
செல்வம் பலதரலாம்
தம்பிப்படை யாவும்பல
தங்கத்திரள் தரலாம்!
நம்பித்தமிழ் முறைபாடிய
நலமேநிறை அண்ணன்
தெம்புக்கது குறைவே! அவர்
திறனுக்கது சிறிதே!

திருமாறன், கலைவாணன், வீரன், வேந்தன் எனப்பாடிய அதே வாய் இன்று அண்ணாத்துரையெனச் சொல்லி எழுதியதைப் பார்த்தால், கண்களையே நம்ப முடியவில்லையே! நெஞ்சு பொறுக்கவில்லை! நெஞ்சு பொறுக்கவில்லை!! மூன்றாண்டுக்கு முன்னால் குன்றத்தூர் ஊராட்சி மன்றத்தின் வரவேற்பு இதழில்

தென்தமிழ் வளர்த்த செல்வ!
தென்திசை வணங்கும் வீர!
புன்மைகள் தீர்த்த நேய!
புலவர்கள் போற்றும் தீர!
... ...

நீரின்றி நிலத்து மக்கள்
நீள்பசி தீரா தன்றோ?
காரின்றி நீரின் தேக்கம்
காண்பதும் அரிதே யன்றோ?
வேரின்றி மரங்கள் வாழும்
விதத்தையும் காணோ
—மன்றோ?
நீரின்றித் தமிழர் வாழும்
நிலையினைக் காண்பார்
—யாரே!

எனப் பாடிய இவையத்தனையும் வெறும் வார்த்தையோ? மனத்தை மறைத்துவிட்டா பாடினீர்? இருக்காதே! அங்ஙனமிருந்தால் இவ்வளவுச் சிறப்பாகப் பாடியிருக்க முடியாதே! இவையெல்லாம் உள்ளத்தில் ஊறிய உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய அருவித் தென்றலெனும் தேன்தமிழ்க் கவிதைகளன்றோ?

இதற்குள்ளாக எப்படிக் கவிஞரே! மனத்தை மாற்றிக்கொண்டீர்? கல்லினும் வலிமையாய் எஃகினும் உறுதியாய் ஆக்கிக் கொண்டீர்!

கடுகளவும் மாசில்லாக் காஞ்சித் தலைவனைச் சுடு சொல்லால் சுட்டெரித்த பாவேந்தரையே "குரல் கெட்ட குயிலே கேள்" என்று எடுத்ததொரு எழுதுகோலால் 'பா' எழுதி விடுத்ததொரு அழகை என்னென்போம்.

விந்தியக் கோடும் பொய்யோ!
விரிகடல் வலையும் பொய்யோ!
சந்திரன் எழிலும் பொய்யோ!
தாரகை ஒளியும் பொய்யோ!
தென்திசைத் தமிழும் பொய்யோ
தென்றலும் பொய்யோ!
—என்றும்!
நின்னிசைப் பாக்களும்
—பொய்யோ?
நற்றமிழ் கவிஞர் கோ, வே!

என எங்களை நாங்களேக் கேட்டு ஆறுதல் அடைவதா? கழகத்தில் பூசல் ஏற்பட்டபோது தனது 'திராவிட நாடு' இதழில் தங்களுக்கு 'கல்லக்குடி'ப் போராட்டத்தில் ஏற்பட்ட நிலையைக் கேட்டு ஆற்றாது அழுததையும்—மனம் பட்டபாட்டை பாங்காகத் தனித்தமிழில் எழுதியிருந்தாரே அண்ணா அந்த பாசத்தை மறந்தீரோ?

கழகக் காவலர் கூட்டத்தில் அண்ணனின் கைகளை எடுத்துக்

இரத்த ஆறு ஓடியது! பிணம் மலைபோலக் குவிந்தது!!
அறுபதுலட்சம் பேரை
ஒரேஒருவன்
கொன்ற கோரம்!

* * *

உண்மை நிகழ்ச்சி! சரிதச் சம்பவம்!!
* மாற்றுமொழிக் கதைகளோடு;
* மன எழுச்சிக் கட்டுரைகளோடு;
இந்த அருமையான நெஞ்சுதுடிக்கும் வரலாறும்

அடுத்த இதழில்!

'அறப்போர்' : சென்னை.24

அதிகப் பிரதிகளுக்குச் செவ்வாய்க்குள் தெரிவிக்க... முன் பணத்தோடு வருபவையே கவனிக்கப்பெறும்.

நீங்கள் என்னைக் 'கழகம்' ஆக்கி!

மலையாளத் தோழர்கள் நடாத்திடும் நாடகமல்ல! மாபெரும் அமெரிக்கத் தலைவர், கென்னடியின் ஆங்கிலத்தின் மொழிப் பெயர்ப்பு!!



மேதின விழாவுக்கு இருதினங்களுக்குமுன் 'அமெரிக்கத் தலைவருக்கு அமெரிக்காவிலுள்ள பத்திரிகை முதலாளிகள் ஒரு விருந்தளித்திருக் கின்றனர், அப்போது கென்னடி சொன்னாராம், 'நீங்கள் மட்டும் சரியாக இருந்தால் கார்ல் மார்க்ஸ் உருவாகியிருக்க மாட்டார்' என்பதாக,

கார்ல் மார்க்ஸ், புதுமைச் சித்தாந்தம் தந்த புரட்சி விளக்கு எனப் புகழ்கிறோம்! ஆனால், அவர், அப்பப்பா வாழ்க்கையில் பட்டிருக்கிற வறுமை சொல்லக்கூடியதல்ல. அவருடைய குழந்தையொன்று, தாயின் மார்பிலிருந்து பால் வற்றியதால் வந்த இரத்தத்தைக் குடித்து மாண்டதாம். சவ அடக்கத்துக்குக்கூடப் பணமில்ல மல், அந்தப் புதுமை கண்ட வித்தகன், போராடியிருக்கிறார்; அவருடைய நண்பர் எங்கேல்ஸ் மட்டும் இல்லாதிருந்தால், அவர் குடும்பம் அப்பொழுதே இறந்திருக்கக்கூடும்!!

அப்படிப்பட்ட நிலையில் கார்ல் மார்க்ஸ் 1851—ல் 'நியுயார்க் கெரல்டு டிரிபியூன்' என்கிற அமெரிக்கப் பத்திரிகையின், இலண்டன் நிருபராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவருக்கு, ஐந்து டாலர், உதவித் தொகையாக அளிக்கப்பட்டதாம்! அது போதாதென்று அவர் விடுத்த—வேண்டுகோள் எதையும், அந்தப் பத்திரிகை முதலாளி; கிஞ்சித்தும் கவனிக்கவில்லையாம்!

அதனையே கென்னடி குறிப்பிட்டிருக்கிறார், "ஒருவேளை அந்த பத்திரிகை அவரை ஒழுங்காக நடத்தியிருந்தால் சரித்திரமே மாறிஇருக்கும்" என்பதாக.

வறுமை முளைக்கும்போது, 'விதி' என்று சொல்லாமல். ஏன்? இப்படி நாம் இருக்கிறோம்? என்கிற எண்ணங்கள் அலைமோதுமானால், எவனும், கம்யூனிஸ்டாகத்தான் வேண்டும். கம்யூனிஸ்டாகவேண்டுமென்றால்; அந்தப் பெயருள்ள கட்சியில் போய் சேர்வதென்று பொருளல்ல. எல்லாம் எல்லாருக்கும் வேண்டும், என்று உணர்கின்ற பொதுவுடைமை வாதியாகத் தான்வேண்டும். அப்படிப்பட்ட உணர்ச்சியினை ஒரு தனிநபர் பெற்றால், சமதர்மம் நாடுகிறவன் ஆகிறான் ஒரு நாடு பெறுமானால், அந்நாடு, அந்நியனிடமிருந்து விடுதலை பெறும், போர்க்களமாகும், திராவிட நாடு திராவிடருக்கே எனும் நம் நிலையும் அதுதான்! நாமும், சமதர்ம வாழ்வே கோருகிறோம்!

கென்னடி சொன்னதுபோல, நம்மை, சமதர்ம வாதிகளாக ஆக்கியதும்; நமது நாட்டைப் பொதுவுடைமைப் பூங்காவாக்கும் ஆர்வத்தில் தள்ளியதும் வடநாட்டுப் பிர்லாவும் டாடாவும் டால்மியாவும், நமது மண்ணைச் சுரண்டுவதும்—அந்தச் சுரண்டலுக்கு இங்குள்ள பண முதலைகள் ஒத்தூதுவதுமான போக்குத் தொடர்ந்து நடப்பதுதான்,

—0—

கண்களில் ஒற்றிக் கண்ணீரால் கழுவினீரே, அந்த நிகழ்ச்சி நடந்து ஆண்டு பலவா முடிந்து விட்டது? அதற்குள் மறந்துவிட.

ஜனவரி 6 ஆம் நாள் நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டுவதென கழகம் முடிவெடுத்தவுடன் திருச்சியில் காட்டுகிறேன். சென்னையில் காட்டுகிறேன் என்று கூறி எங்கும் காட்டாமல் மறைந்திருந்தீரே. அதற்காக தங்கள் மேல் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் ஏன்? சிந்தித்தீரா? குடும்பம் என்றால் சிறிது ஏற்றத்தாழ்வு இருக்கத்தான் செய்யுமென்ற குடும்பப் பாசமன்றோ காரணம்! அந்தப் பாசத்தைப் பழிதீர. எள்ளி நகையாடினீர்!! நன்றோ நற்றமிழ்க் கவிஞரே!

இன்று தனிக் கட்சி யமைத்த ஆளுடன்போய், தாறுமாறுகப் பேசி பொய்ப்பழிச்சுமத்துகின்றீர், இவ்வேளையில் தாங்கள் எழுதிய கவிதைதான் நினைவிற்கு வருகிறது.

எப்பழி யேனும் நாங்கள்
இம்மியும் அசையோம்! ஆனால்
பொய்ப்பழி உரைப்போர்
—நாவைப்
பொசுக்குவோம்! யாரா னாலும்
எப்பெருங் கவியா னாலும்
இழிப்பொருள் என்போம்!
—காறித்
துப்புவோம். குயிலே! கந்தல்
துணியெனப் புரளா தே, நீ!

என்ற வீர உணர்ச்சி கொழுந்து விட்டெரியும் வரிகளைப் படித்து எம்போன்ற இளைஞரெல்லாம் கழகத்தின்பால் கொண்ட உறுதி அசைக்கமுடியாத நம்பிக்கை, வீர உணர்ச்சி, இன்று நீங்களே அழிக்கமுடியாத அளவு உள்ளத்தில் பதிந்துவிட்டதே என்பதை மறந்து ஒரு நடிகர் கட்சியை விட்டுத் போனதே அவரைக் கண்டபடி பேசியதால்தான் என கூறியுள்ளீர். உள்ளம் ஒப்புகிறதா கவிஞரே இப்படிக் கூற!

அடுத்து மாற்றுக் கட்சிக்காரர்களை ஆபர்சமாகத் திட்டிப்பேசுகின்றோம் என்கிறீர். இன்றைய தங்கள் புதியக் கட்சித் தலைவர் சம்பத்தைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே, சேலம் அரிசிப்பாளையத்தில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் திரு காமராசரை 'ஜந்து' என்றும்; கக்கன் அவர்களை 'மக்கன்' என்றும் பேசியதை—இல்லை, இல்லை யேசியதை இன்னும் காதில் ஒலித்துக் கொண்டே யிருக்கிறதே! தந்தை பெரியாரை தோழர் பெரியார் என்று தென்றலில் எழுதி தமிழர் பண்பு காத்ததை என்னென்று போற்றுவோம்! எப்படிக் சுூறுவோம்!!

போய் வருகிறேன் என்றீர். பின் யோவான் சுவான் தத்துவம் என்றீர். இறந்தாலும், கருப்பு சிவப்புத் துணியே என் பிணத்தை அலங்கரிக்கும் என்றீர். இப்பொழுது இல்லை என்கின்றீர்.

காவலர் கூட்டத்தில் மன்னிப்புக் கேட்டதற்கு ஒரு நாட்டிற்காக—ஒரு சமுதாயத்திற்காக மன்னிப்புக் கேட்பது கேவலமல்ல என்று பெருமையாகக் கூறிக் கொண்டீர். இன்று சுயமரியாதையே பறிபோவதாக கூறுகின்றீர். இப்படியே ஆயிரமாயிரமாக ஆரம்பம் முதல் இன்றுவரை மாறுபட்டு நடந்து வந்ததை அடுக்கிக்கொண்டே போகலாம் என்ன செய்ய

காலையில் மலரும் எண்ணம்
கண்துயின் றெழுங்கா லத்தின்
மூலையில் விழுமோ, இல்லை
மூளைதான் மூன்றோ, நான்கோ?
மானுயின் 'மயக்கம்' மீண்டும்
மலையே தெளியும் போலும்
வேலையில் லாத தாலே
வீண்பழி சுமத்த வந்தாய்!

என்ற தங்கள் கவிதைக்கு தாங்களே இலக்கணமாய் அமைந்துள்ளீர்.—திகழ்கின்றீர். வேறு கட்சியில் சேர்ந்து கொண்டீர். எங்கிருந்தாலும் வாழ்க; வளர்க! ஆனால் கழகத்தின்மேல் பொய்ப் பழி சுமத்தவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம். "குரல் கெட்டக் குயிலே கேள்" என்ற கவிதையில் ஒரு பகுதி தங்கள் பார்வைக்கு வைக்கிறோம்.

உன்னிடம் பக்தி கொண்ட
ஒருவனே சொல்கிறான்! கேள்.
தென்னவர் தலைவன, வெற்றித்
திறத்தினன்! நின்னைத் தேடிச்
சொன்னவன்! நிதியைச்சேர்த்துத்
தந்தவன்! தூயன்! வீரன்!
அன்னவன் முதுகிற் கையால்
அடிப்பவன் கயவன்! மூடன்!
இழந்தநின் புகழை மீட்க
இதுவல பாதை! வீழ்ந்தே
அழிந்தநின் பெருமை மீள
அறிவுடன் எழுவாய்! 'நாயின்
இழிந்ததோர்' தமிழர் நாட்டை
எழுப்பிய கவிஞன், தானே
இழிந்தொழிந் தழிதல் நனறோ?
எண்ணியே செய்க செய்கை!

இருந்தநாள் புகழ்பெ றுத
இன்கவிக் கூட்டம் யாவும்
இறந்தபின் புகழை நாடும்
இத்தமிழ் அகத்தில் நீயே
இருந்தநாள் புகழைப் பெற்றாய்
இருகரம் குவிப்போர் கண்டாய்
இறந்தபுன் பாடை மீதே
எச்சிலைத் திரட்டா தே, நீ

அண்ணனின் பின்னே செல்லும்
அருந்தமிழ்ப் புலவோர் கூட்டம்
திண்ணமாய் இந்தநே ரத்தில்
திரையினும் மிகவே யாகும்!
எண்ணமே பழுதாய்ப் போன
நின்னையும் எனது அண்ணன்
கண்ணியன் மன்னிப் பான்!
—என்
கவிக்குலம் மன்னிக் காது!
அன்பினுற் சொன்னேன்! உன்னை
அறிந்ததால் சொன்னேன்!
—இந்த
வம்பினுல் பெருமை சாகும்
வண்டமிழ் இனத்தர் வார்த்
—தைக்
கம்பினுல் உதைப்பர்! நின்னைக்
கவியென மதியார்! பின்னுள்
எனபையும் நாய்கள் தினனும்
இப்புவி மறந்தே போகும்!

இனியும் தோமான் நாட்டு ஆடுகளைப்போல் நாட்டு மக்களை எண்ண வேண்டாம். தமிழர் உள்ளங்களில் நீர் ஒரு கவிஞராக என்றென்றும் வீற்றிருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தால் இதைக் கூறினோம். எண்ணியே செய்க செய்கை.

தமிழரும் ஆந்திரரும்

3

நெடியோன் குன்றமுந் தொடி-
யோள் பவ்வமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன
னன்னாட்டு''
(சிலப்)

''வண்புகழ் மூவர் தண்பொழில்
வரைப்பின்''
(தொல்)

''தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை
யிறந்தே''
(அகம்)

''பனிபடு சோலை வேங்கடத்
தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயி-
-னும்''
(ஷி)

''கட்டிநன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயி
னும்''
(குறுந்)

எனவ்ரும் தொடர்கள் இக் கருத்தையே குறிப்பிடக்கூடியன. ஆனால், அங்கியரான வடவேந்தர் தமிழ் நாட்டுட்புக முயன்றகாலங்களிலே தமிழ் மூவேந்தரும் ஒருங்குதிரண்டு, தமிழகத்துள் தலை நீட்டவுமுடியாமல் அவர்களைத் தடுத்து வந்தனர். அதனால், திக்குவிசயஞ் செய்து ஏகசக்ராதிபத்தியம் பூண்ட வடவரசர்க்கும் தமிழ் நாடு என்றால் விலகியே நிற்க வேண்டியதாயிற்று, பரத கண்டம் பெரும்பான்மையும் தன் ஒரு குடைக் கீழ் வைத்தாண்ட அசோக சக்கரவர்த்தி காலத்தும் தமிழராற்றல் ஓங்கியிருந்ததென்பது, அவ்வரசர் பெருமான் தமிழ் மூவேந்தரையுந் தன்னோடொத்தவராகக்கருதி நட்பு முறையில் அவர்களிடந்தூதுவர்களை அனுப்பிப்போந்த செய்தியால் தெரியலாம், மௌரிய ஏகாதிபத்தியம் தமிழகத்தின எல்லைக்குமப்பால் மைசூர்ப் பிராந்தியத்தை ஒட்டியிருந்தது என்ற செய்தி அறியத்தக்கது, பிற்காலத்தே பிரபலம் பெற்றெழுந்த குப்த-ஏகாதிபத்தியமும் தமிழ் நாட்டைத் தன்னுட்கொண்டதன்று. ஆகவே, சங்க காலத்தே தமிழ் வேந்தர் பாஷை நடை முதலியவற்றால் வேறான மக்களை அடக்கியாள முயன்றிலர் என்பதும், தம் நாட்டில் அந்நியர் பிரவேசிக்கவும் இடங் கொடுத்திலர் என்பதுந் தெளிவாயின, அங்ஙனமே, அக் காலத்து வடுகரசரும் தமிழ் நாட்டை ஆள முயன்ற செய்திக்குச் சங்க நூல்களிலும் ஆந்திரத்திலும் ஆதாரங்காணப் படாமையால், அவர்களும் முற்காலத்கத தமிழருடன் அமைதி பெற்று வாழ்ந்தவரென்றே சொல்லலாம்.

இங்ஙனமிருந்த தமிழர் வடுகர்களின் நிலைமை, சங்க காலத்துக்குப்பின்பு தான் மாறுவதாயிற்று. இம்மாற்றத்திற்குக் காரணமானவர், வடக்கிலிருந்து படையெடுத்துவந்த வேற்றரசரேயாவர், பல்லவர் சளுக்கர் என்ற வடவேந்தர் ஆந்திரங்கன்னட முதலுய தேசங்களை வென்றடிப் படுத்திய காலங்களில் அவர்கள் பேராசை தமிழ் நாட்டையும் கவர்ந்தது, அது முதலே தமிழர்க்கும் வடவர்க்கும் தமிழகத்திலும் பிறவிடங்களிலும் நடந்த போர்ச் செய்திகள் மிகுதியாகக் கேட்கப் படுகின்றன. இறையனார்களவியலுரையிற்கண்ட பாண்டிக்கோவைப் பாடல்களும், ஆழ்வார் முதலியோர் பாசுரங்களும், சிலாதாமிர சாஸனங்களும் பிறவும் இச் செய்திகளைக் குறிக்கக் கூடியன பல்லவர் தமிழ் நாட்டில் வேரூன்றிய காலத்தில் அவர்க்கும் வடுகர்க்கும் நடந்த போர்களுமுண்டு.

''முலைபொழி தீம்பான் மண்-
சேறு படுப்ப
மலர்தலை யுலக மோம்பு மென்ப
பாசிலைத் தொண்டைப் பல்லவ
னுணையின்
வெட்சித் தாயத்து வில்லே ருழ
-வர்
பொருந்தா வடுகர் முனைச் சுரங்
கடந்து கொண்ட பல்லா
னிரையே''
]தொல். பொ. 55, நச். உரை)

என்ற பழைய பாட்டில் 'தொண்டை நாடாண்ட பல்லவனுடைய சேனை, பகைவராகிய வடுகரது போரிலே கவர்ந்துவந்த பசுக்கூட்டங்கள், உலகத்தை ஊட்டிக்காக்கக்கூடியவை' என்று கருத்துப்படப் பாடப்பட்டிருத்தல், மேற்கூறிய போர்ச்செய்தியைக் காட்டும். இப் பல்லவரைப் போலவே, சளுக்கியவேந்தரும் பின்பு ஆந்திரதேசத்தில் வேங்கி நாட்டில் தம்மதிகாரத்தைத்தாபித்துப் பின் ஆந்திரரென்றே சொல்லும்படி ஆயினர். இவர்களுடன் பெரும் போர்களைச் சோழர்கள் தெலுங்கு தேசத்திலே சென்று நடத்த வேண்டி வந்தது. முதல் இராசராசன், முதல் இராசேந்திரன் முதலிய சோழர்கள் நடத்திய அப்போர் விவரங்கள் சாஸனங்களால் நன்கறியப் பட்டவை.

(தொடரும்)

தமிழறிஞர் மு. இராகவையங்கார் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழர் ஆந்திரர் உறவு பற்றியும், அவர்தம் மொழிகள் பற்றியும் ஆற்றிய பேச்சின் 3-ம் பகுதி இங்கு தரப்படுகிறது. திராவிட நாடு எங்கிருக்கிறது, என்று ஏதும் தெரியாதவர்போல் கேட்போர் படித்துத் தெளியவும், கழகத்தோழர்கள் பயன் பெறவும் இந்த ஆராய்ச்சிக் கட்டுரைத்தொடர் பயன்படும்.

2-ம பக்கத் தொடர்ச்சி

வந்தால், நிறையச் சம்பாதிப்பானே என்பதாக! நம்முடைய சுயநலத்தை மட்டுமே இதில் பார்க்கிறோம்! சம்பாதனையே, நமக்கு முக்கியமாகப் படுகிறது! ஏனெனில், நாம் இருக்கிற சமூக அமைப்பு, அப்படி. அங்கே, ஒருவன் டாக்டரானால், அவன் மூலம் எத்தனை மக்களுக்கு நன்மை என்று அரசாங்கம் கணக்குப் போடுகிறது. ஆர்வமுள்ள எவனையும் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவருவதால், நாட்டுக்கு நல்லது என்று கருதப்படுகிறது. இதனால், பொறுப்பு, அரசாங்கத்தினுடையதாகிறது! பெற்றோர், இங்குபோல, தொல்லைப்படவேண்டிய அவசியமில்லை!!

இப்படியொரு அரசும் சமூகமும் உண்டானால் ஏன் திருடன் முளைக்கப்போகிறான்—ரயில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்கிறவன் ஏற்படப்போகிறான்—மற்றும் சமூகத்தை ஏமாற்றியே வாழவேண்டிய நிலையில் உள்ளவர்கள் ஏன், உண்டாகப்போகிறார்கள்.

*

கலைவாணர் என். எஸ். கே. சொல்வார், ரஷ்யாவைப் பற்றி செபஸ்டாபூல் நகர மட்டுமல்ல, இதேபோல் வாழ்க்கைமுறை ரஷ்யாவின் நகரங்கள் பலவினும் உண்டாம்! உண்மையில் இப்படிப்பட்ட ஒரு நல்ல நிலைமை உண்டாவதையே ''சொர்க்கம்'' என்று சொல்லி யிருக்க வேண்டும், புராணீகர்கள். இப்படிப்பட்ட ஒரு நாட்டினையே, நாம் இன்பபூமி, என்கிறோம். பொறாமை—சுயநலம்—தன்னுடைமை—என்னுடையது என்று பேசும் தனி உரிமை — முதலியவை ஒழிந்து, அறவழி மலர்ந்த அரசை உண்டாக்க வேண்டும் என்பதுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியமாகும்! இந்த இலட்சியப் பாதையினைப் பூர்ணமாக்க, நாம்—இதயத்தில் ஏந்தியிருப்பது, சமதர்மக் கொள்கையாகும்! ஐயோ, இந்தக் கொள்கையுமன்றோ தீதென்று செப்பி, முதலாளிகளைப் போலப் பேசுகிறாராம் சம்பத்—அவர் ஆரம்பித்திருக்கிற கட்சியின் பொருளாதாரம், சமதர்ம நோக்கம் கொண்டதல்லவாமே!! இதை எங்கே போய்ச் சொல்வது? சமதர்ம வழியிலாவிடின் 'செபாஸ்டபூல்' எங்ஙனம் ஏற்படும்! எப்படி, மனிதனுடைய 'தேவை'களைப் பூர்த்தி செய்யும், ஒரு அரசு நிறுவமுடியும். வல்லான் அடித்ததே கொள்ளைதானே, பிறகு! இது, முதலாளிகள் ஆசையாச்சே. இது, எப்படி வந்தது சம்பத்துக்கு, அறியோம்! அதற்காகக் காலத்தை விரயம் செய்வதைவிட, அடுத்த மே தினத்துக்குள், பாட்டாளிகளின் கொடி பட்டொளி வீசிப்பறக்கும் வகையில் கழகத்தை வலிவும் பொலிவும் உள்ளதாக்குவோம்! வருக சமதர்ம அரசு—ஒழிக தன்னலம்!

—0—

(5-ம் பக்க தொடர்ச்சி]

கட்சியா---இதன் பெயரைப் பேப்பரில் போடலாமா---சேச்சே! சம்பத்தாம் மதியழகனும் கருணாநிதியாமே, இதுகள் தலைவர்களா---என்ற நிலைமாறி, இதைப்பற்றித் தப்பும் தவறுகப் போட்டால்தான் ஒழிக்க முடியும் என்கிற அளவுக்கு ஒரு உத்வேகம் வந்துள்ளதென்றால், வளர்ச்சியின், அறிகுறிதானே அது!!

* * *

அப்படிப்பட்ட வளர்ச்சியை, முற்போக்கு இயக்கமான நாம், பெற்றிருப்பது காண மகிழ்வோம்.

அதே சமயம், இதனை உடைக்க, முதலாளித்துவ ஆதிக்கம் எவ்வளவு திட்டமிட்டுச் சதி செய்கிறது என்பதையும் உணர்வோம்.

அப்படி உணர்கிறபோது, ''ஏ! முதலாளித்துவமே. உன் மோகனப் பார்வைக்கு, சபலம் கொண்டவர்களைத் தான் வீழ்த்த முடியும்---அவர்கள் உன்னைப் போல வாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்---எங்களைப்போல் குடிசையிலே குடியிருந்து பழக்கமில்லாதவர்கள்---எனவேதான், உன்னால் சீக்கிரம் அவர்களை வசிகரிக்க முடிந்தது. இதுவும் ஒரு நல்லதுக்குத்தான்! நாளை எங்கள் இலட்சியம் பலிக்கும்போது, இந்தச் சுயநலவாதிகள் இருந்து படாதபாடு படுத்தாமல் இப்போதே போனது, எமக்கு ஒரு பாடம். இனியாவது, இவர் போன்றவர்களை நம்பாமலிருப்போமல்லவா?'', என்று பெருமூச்சு விட்டுவிட்டு, நம் வழியில் நடக்கவேண்டும்.

* * *

நாலுபேராகயிருந்தால் கூடக்கவலையில்லை-நல்லவர்கள் போதும்.

நல்ல வேளையாக, போனவர்கள் நாலுபேர் என்பது, நமது கழகத் தொண்டர்கள் கொண்டுள்ள உள்ளத் தெளிவினையே உணர்த்துகிறது.

தெளிவுள்ள நெஞ்சங்களே, ஒரு முற்போக்கு இயக்கத்துக்குத் தேவை! அந்த நெஞ்சங்கள்தான், நெருப்பையும் தாங்கும், குண்டுகளையும் ஏந்தும், தலைவன் என்று அழைக்காததால் கோபம் கொள்ளாது, தன் வசம் கால்ரூபாய் கழகப்பணம் இருந்தாலும் மனந்துடிக்கும், பொது வாழ்க்கையின் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்கிற 'பூர்ஷ்வா' மனப்பான்மை அந்த நெஞ்சங்களிடம், நெருங்கவும் நெருங்காது!!

வாழ்க அந்த நெஞ்சங்கள்! வாழ்க அந்தப் பாட்டாளிகள்! ஒழிக, சுகவாச அரசியல் வாதிகள்!!---என்று, மேதின நாளில், ஒவ்வொருவரும் சூளுரைத்துக் கொள்வோமாக.

—0—

பழைமைப் பாசம் ஒழிப்பீர் !

4-ம் பக்கம் தொடர்ச்சி

லாளி இனத்தின் பொருளாதார வாழ்வை மட்டுமல்ல, சமூக வாழ்வையும் உயர்த்த, அவர்களிடையே புகுந்து அவர்களை அடிமைப் படுத்தியுள்ள ஜாதி, பேத நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள், புராண சாஸ்திரப் பூச்சுக்கள், பழங் காலக் கற்பனைப் பூச்சாண்டிகள், மனுமாந்தாதாப் பேச்சுக்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், பஞ்சாங்கப் பல்லவிகள், குறி-சித்து--கோசார பலன்கள் ஆகியவற்றின் நச்சுக் காற்றைப் போக்கப் பாடுபடும் போது—மற்றக் கட்சித் தோழர்கள் என்ன செய்கிறார்கள்? தேசீயப் பத்திரிகைகள் ஆரூடம், குறி சோதிடம், நாட்பலன், வாரப் பலன் ஆராய்ச்சியில் முனைந்து மக்களிடம் இயற்கையில் தேய்ந்து, தீய்ந்து போகத் தக்க மடமைகளைப் புதுப்பிக்க முனைகின்றன. இவற்றின் பயனை நுகர எண்ணங்கொண்ட பெருத்த முதலாளித்துவ முதலைகள் இப்பத்திரிகைகளை ஒவ்வொன்றாக வாங்கிச் சேர்த்து, முதலாளித்துவத்திற்கும் பழைமைக்கும் அசைக்க முடியாத அணை எழுப்பி, நீர் தேக்கி, நவீன நாகரிகமடமையை வளர்க்கின்றன. சுயராஜ்ய அரசாங்கமோ முன் எந்த அரசாங்கமும், வெள்ளையர் அரசாங்கம் கூட வளையாத அளவு, இந்த முதலாளிகளுக்கும் பழைமைக்கும் குனிந்து, வளைந்து கொடுக்கிறது. ஜாதி மத வகுப்புப் பேத மற்றதென்று பறைசாற்றிக் கொண்டு இவ்வரசாங்கம்—புத்தர் தம் தரும சக்கரத்தைத் தன் கொடியில் தாங்கிய டில்லி அரசாங்கம்—சுயராஜ்யம் பெறுவதற்கே நாள், நட்சத்திரம், இராகு வேளை, குளிகை காலம், அமிர்த-சித்த யோகம் பார்க்கவேண்டியிருந்தது. கப்பலுக்குத் தேங்காய் உடைத்து மந்திரம் சொல்ல வேண்டியிருந்தது; கல்விக்குப் பணமில்லையென்று கைவிரித்து விட்டு, பழைய கோயில்களைப் புதுப்பித்து, விக்கிரக பிரதிஷ்டைகள் செய்து; புதுக் கோயில் கட்ட லட்சக் கணக்கில் செலவிடுகிறது. மத ஆர்வத்தைக் கிளப்பி, மக்களைச் சுரண்டி பழைமையும் தானும் கொழுக்க, வயிறு பெருக்க அரசாங்கம் கொண்டுள்ள பழைமை மனப்பான்மைக்குத் திருப்தி ஸ்பெஷல் பஸ் சர்விஸ் ஒரு சான்று. பழய திருப்பதியும் பழனியும் போதாதென்று புது வடபழனிக்குக்கூட ஆக்கம் தரப்படுகிறது.

ஒரு தராசு ஒரு டெலிபோன்

மதம் முற்காலங்களில் தர்ப்பையையும் முக்கோலையும் வைத்துக் கொண்டு அறிவை அடக்கிச் செங்கோலை சாய வைத்தது. ஆனால் இன்று அதற்குச் செங்கோலைவிட வலிமை வாய்ந்த தராசுக் கோலின் துணை கிடைத்திருக்கிறது. இந்த நாட்டை அடக்கியாளும சக்திகள் இன்று வாளும், வில்லுமல்ல; துப்பாக்கிக் குண்டும் அணுக்குண்டுங்கூட அல்ல. ஆனால் துப்பாக்கிக் குண்டுகளையும்விட வலிமை வாய்ந்த இரு சக்திகளை வடநாட்டு முதலாளி வைத்துக்கொண்டு இயக்குகிறான். அந்தச் சக்திகள் தராசும் டெலிபோனுமே!

பஞ்சாங்கமும் பழைமையும் இன்றும் ஆட்டிப்படைக்கும் நாடு நம் நாடு! ஆனால் பஞ்சாங்கத்தையும் பழைமையையும்விட வயிரம் வாய்ந்த தராசும் டெலிபோனும் தாங்கிய முதலாளித்துவம் மதத்துக்குப் புதுச் சக்தி ஊட்டி மக்களுலகை ஆட்டி வைக்கின்றது. முதலாளித்துவ மேடை மீதிருந்து மதம் வறுமை விதைகளையும் மடமை விதைகளையும் பொதுமக்கள் வாழ்வில் நவீன சாதனங்களின் உதவிகொண்டு தொலைதூரம் பரப்பி முதலாளித்துவ ஆட்சியையும், மத ஆட்சியையும்ஒருங்கே வளர்க்க முடிகிறது.

மனிதனும் மிருகமும்

மனிதன் அறிவுடையவன், விலங்குகள் அறிவில்லாத தாழ்ந்த படியிலுள்ளவை என்றுஅடிக்கடி கூறுகிறோம். ஆனால் உரிமைகளைப் பற்றியமட்டில் விலங்குகள் நிலைதான் மனிதன் நிலையைவிட தொழிலாளர் நிலையைவிட மேல் என்று கூறவேண்டியிருக்கிறது.

மனிதன் உணவு உண்கிறான். மிருகமும் உணவு உண்கிறது. மனிதன் காதல் புரிகிறான். மிருகமும் காதல் புரிகிறது. மக்களிலே ஆணும், பெண்ணும் மருவுகின்றன. விலங்குகளிலும் அப்படியே மனிதன் பிரஜா உற்பத்தியில் ஈடுபடுகிறான்; மிருகமும் பிரஜா உற்பத்தியில் ஈடுபடுகிறது. ஆனால் மிருகத்திற்குத் தேவைக்கேற்ற வசதி இருக்கிறது. மனிதனுக்கோ தேவைக்கேற்ற வசதியில்லை.

வாழ்விலே உரிமைகள் பல உண்டு. நாகரிக நாட்டிலே சகல

(10-ம் பக்கம் காண்க)

சம்பத்...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

கொள்ளவில்லை. தம்பிமார்கள் சலிப்படையாமல் இருக்கவேண்டுமென்பதற்காகவே அவர் நித்தம் தூண்டி வருகிறார். நமக்கு ஒரு தூண்டுகோலாக இருந்து வருகிறார்.

"பர்மாவிலே 32 வயதே நிரம்பிய அவுங்சான், விடுதலை வீரனாகப் பணியாற்றி, விடுதலை பெற்ற பர்மாவுக்கு முதலமைச்சரானார். யாருக்கும் கிடைக்காத வாய்ப்பு—எதிரிகளின் கையாலே சாவுகின்ற வாய்ப்பு—அவருக்குக் கிடைத்தது. அவுங்சானின் சாதனைகளைப்போல் நாமும் ஏன் பணியாற்றவில்லை ;என்பதுதான் அண்ணா அவர்களின் அதிருப்திக்குக் காரணம். உலகம் எதைப் பாராட்டுகிறதோ அதில் அண்ணா அவர்களுக்கு அதிருப்தி.

"தி. மு. கழகம் தோன்றி இந்தப் பத்தாண்டில் பெருகியிருப்பது அண்ணனின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்று. இங்கே நீங்கள் ஏன் இலட்சக் கணக்கில் வீற்றிருக்கிறீர்கள்? எண்ணற்றத் தாய்மார்கள் ஏன் வீற்றிருக்கிறார்கள்? இத்தகைய ஒரு உயிருணர்வு இந்தப் பத்தாண்டில் எந்த ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டது? திராவிட விடுதலை இயக்கத்தின் அடிப்படை இலட்சியத்தை விடாமல், உறுதியோடு காப்பாற்றிக் கொடுத்தப் பெருந்தகையின் 50-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறோம் என்ற மெய்யுணர்வால்தான் இங்கே இப்படிக் கூடியிருக்கிறீர்கள்.

*

"அடிப்படை லட்சியத்திலே கேரளமும், கர்நாடகமும், ஆந்திரமும் தமிழகமும் சேர்ந்து திராவிடம் என்று முழக்கமிட்டவர்கள் இன்று தமிழ் நாடு மட்டும் போதும், என்று பாதை மாறி, எங்கோ அலைந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அண்ணா அவர்களுக்கு திராவிடத்தின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

"தமிழ் நாடு போதும்" என்று அவர்கள் சொல்கிறார்கள்; 'போதாது' என்கிறார் அண்ணா.

"ஏன் நமது பெரிய திராவிட நாகரிகத்தைச் சின்னபின்னமாக்கவேண்டும்? திராவிட நாகரிகம் ஒரு தனித் தன்மை வாய்ந்த--ஒருமைப்பாட்டுடன் கூடிய--கால வெள்ளத்தால் அடித்துப் போகப் படாத ஒன்றாக இன்னமும் இருந்து கொண்டிருக்கிறது. எனவேதான், திராவிட நாடு என்று அழுத்தமாகச் சொல்கிறார் அண்ணா.

* * *

"அரசியலிலே தம் கொள்கைகளை மாற்றிக் கொள்பவர்களில் இரண்டு ரகம் உண்டு. அவசரக்காரர்களாக இருப்பவர்கள் அவசரப்பட்டுத் தம் கொள்கையை மாற்றிக் கொள்வது ஒரு ரகம். தம் வாழ் நாளில் பெரும் பகுதியும் தம் ஆற்றல் முழுவதையும் காட்டித் தீர்த்துவிட்டு வெற்றி கிட்டாத காரணத்தால் கொள்கையை மாற்றிக் கொள்பவர் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர். வேறு சிலர் இருக்கிறார்கள்—அவர்கள் உள்ளமே அவ்வளவு தான்!

"நமக்கு ஆற்றலும் இருக்கிறது ஆயுளும் நிறைய இருக்கிறது. நாம் அவசரப்படத் தேவையில்லை. திராவிட நாட்டிலுள்ள 4 மாநிலங்களில் ஒரு மாநிலம் இத்தகைய விடுதலை உணர்ச்சியைப் பெற்றுவிட்டது. மற்ற மூன்று மாநிலங்களும் இந்த உணர்வைப் பெறச் செய்யும் பணியில் நாம் ஈடுபட்டால் திராவிடத் திரு நாட்டை நாம் நிச்சயம் அடைய முடியும்."

—o—

கோடம்பாக்கம் புலியூரிலுள்ள சென்னை மாநகராட்சி தொடக்கப்பள்ளி சார்பாக பெற்றோர் தினவிழா சென்னைமேயர் முனுசாமி தலைமையில் கொண்டாடப்பட்ட பொழுது "அறப்போர்" ஆசிரியர் அரங்கண்ணல் சா. கணேசன்எம்.சி, அளித்ததிருவள்ளுவர் ப்படத்தை திறந்து வைத்த பொழுது எடுத்த படம்.

ருக்கும் வாழ வசதியிருக்கவேண்டும். ஆனல் இன்றைய நாகரிக ஆட்சியிலே தொழிலாளிகள் வாழ்வில் ஏற்றமில்லை. எடுத்துக் காட்டத் தக்க மாற்றமில்லை. பாட்டாளி நல்லாட்சியை நாடுகிருன். ஆனல் அவனுக்குக் கிடைத்த ஆட்சி போரழிவினிடையே நீப்பர் அணைக்கட்டுத் திட்டம் வகுக்கும் மதியுள்ள, துணிவுள்ள; நல்ல நோக்கமுள்ள ஆட்சியன்று; அமைதிக் காலத்திலேயே ஆறவுன்சு தரச் சிணுங்கிய ஆட்சி! ஆனல் ஆலவாய் அப்பனுக்கும் ஆண்டவனுக்கும் அளந்துகொட்ட, சில அமைக்க சிங்கார வாழ்வினருக்குச் செல்வ மாளிகையும், சீரான நகரங்களையும் அமைத்துக் கொடுக்கத் துடித்து முன்வரும் ஆட்சியே கிடைத்திருக்கிறது. அவர்கள் ஆதரவு தேடுவது தொழிலாளியிடம்; ஆதரவு வேண்டுவது தொழிலாளி இனத்திடம். ஆனல் அழைப்பது முதலாளியை; ஆதரவளித்து அரவணைத்துக் கொள்வது முதலாளிகளின் குறுகிய தன்னலக் கும்பலை! அவர்கள் சுமக்க மாட்டாத வரிப்பளுவை சுமத்துவது திராவிடப் பொதுமக்களிடம்; அவ்வரியின் விளைவாக வரும் உரிமை, மதிப்பு, வசதிகள் யாவும் கொடுக்கப்படுவது பழைமைப் பாசிக்கும் அதனை ஆதரிக்கும் போக்குக்கும் அடிபணிந்து கொடுக்கும் நோக்கும் உடைய சிலருக்கு மட்டுமே.

முதல் தாம்பூலம்

வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறுமுன் முதல் தாம்பூலத் தட்டு காங்கிரஸ் காரர்களிடம்தான் வைக்கப்பட்டது. அதைக் காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் பேரால் மட்டுமின்றி தேசத்தின் பேராலும் வாங்கிக் கொண்டார்கள். ஒரு கட்சியின் பேரால் வாங்கவில்லை. தேசக் கட்சிகள் எல்லாவற்றின் பெயராலும் வாங்கினுர்கள். ஆனல் அவர்கள் எல்லாக் கட்சிகளையும் கலந்து தேசீயக் கொடி அமைக்கவில்லை. தாமே அமைத்துக்கொண்டார்கள். அத்துடன் நிற்கவில்லை. தேசீயக் கொடியையே தங்கள் கட்சிக் கொடியாக மக்கள்முன் காட்டி ஏமாற்றுகிருர்கள். அவர்களுக்குத் தாம்பூலம் வைத்தவர்கள் ஏகாதிபத்தியவாதிகள். தாம்பூலம் பெற்றவர்களும் ஏகாதிபத்தியவாதிகளாகும் உரிமைப் பெற்றுவிட்டதாகவே எண்ணிக் கொண்டார்கள் போலும்!

உலக வரலாற்றைப் பார்த்தால் ஏகாதிபத்தியம் என்ருல் என்ன என்பது உங்களுக்கு நன்ருக விளங்கும். ஏகாதிபத்தியவாதிகள் ஒரு நாட்டைத் தங்கள் பொருளாதார வேட்டைக் காடாக்கி ஆதிக்கம் செலுத்துவதைத்தான் ஏகாதிபத்தியம் என்று கூறுகிருேம். சுரண்டப்படும் கடமையில் நாடுகள் இரண்டும் ஒன்ருகவே கருதப்படும். ஆனல் சுரண்டும் உரிமையில் அவை இரண்டாகவே இருக்கும். பிரிட்டிஷ் ஆட்சியில் பிரிட்டனும் இந்தியாவும் ஒரே சாம்ராஜ்யம், ஒரே வேட்டைக் காடு. ஆனல் வேட்டையாடுபவர்கள் பிரிட்டனில்; வேட்டைக் காடாக மட்டுமே இந்தியா இருந்தது. இன்றும் நிலைமை மாறவில்லை. நாடுகளின் பெயரில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. தென்னுடு வேட்டைக்காடு வடநாடு வேட்டையாடுபவர் உரிமை நிலம். சாம்ராஜ்யத்தின் பெயர் சொல்லி, ஆண்ட பழய ஏகாதிபத்திய வாதியிட மிருந்து தேசத்தின் பெயரைச் சொல்லி ஆளும் புதிய ஏகாதிபத்தியவாதி அதைப் பெற்றிருக்கிருன். பழய ஏகாதிபத்தியவாதி ஏழாயிரம் மைலுக்கப்பால் இருந்துகொணடு வேட்டையாடினுன். புதிய ஏகாதிபத்தியவாதி ஆயிரம், ஆயிரத்தைந்நூறு மைல்களுக்குள்ளாகவே தன் தாக்குதல் தளத்தை வைத்துக்கொண்டு ஆளுகிருன்!

நேரு சர்க்காரும் நாமும்

நேரு சர்க்கார் தபாலாபீசுகளை கொளுத்தியும், தந்திக் கம்பங்களை அறுத்தும், ஓடுகின்ற ரயில்களைக் கவிழ்த்தும் சுதந்திரம் பெற்றதாகச் சொல்லட்டும். அப்படி நேரு சர்க்கார் சொன்னல் நான் சொல்கிறேன்; உருண்டோடுகின்ற ரயிலைக் கவிழ்ப்பது கடினமான காரியமல்ல. 1942-ல் ரயிலைக் கவிழ்த்ததுபோல ரயிலைக் கவிழ்ப்பது இன்று நமக்குத் தெரியாத, முடியாத காரியமல்ல. நமக்குத் தந்திக் கம்பிகளை அறுக்கத் தெரியாதா? நன்ருகத் தெரியும். ஆனல் அத்தகைய அழிவுச் சக்திகளிலே நமக்கு நம்பிக்கையில்லை என்பதைப் பல்வேறு இடங்களிலே ஒளிவு மறைவு இன்றிச் சொல்லியிருக்கிருேம். அழிவுச் சக்தியிலே விருப்பமில்லாத எங்களைச் சர்க்கார் பயன்படுத்தினுல், ஆக்க சக்திக்கு வழி கோலலாம்.

தந்திக் கம்பிகளை அறுக்க 'டபிள்பாரல் கன்'னு தேவை? இருட்டிலே நடக்கக்கூடிய பழக்கம், இருட்டிலே செல்லும் பொழுது இடுப்பிலே ஒரு சிறு பேனுக்கத்தி, கையிலே ஒரு சிறு சுத்தி, நெஞ்சிலே கொஞ்சம் துணிவு, போலிஸ்காரருக்குக் கொஞ்சம் ஞாபக மறதி உண்டு பண்ணும் திறம் — இவ்வளவு போதுமே! இதுபோன்ற கீழ்த்தரமான பலாத்காரச் செயல்களினுல் நாட்டின் நிலையை எப்படி உயர்த்த முடியும்? மக்களின் ஒழுக்கப் பண்பைத்தான் இதனுல் கெடுக்க முடியும்,

சுதந்திரத்தைப் போராடிப் பெற்ற நாடுகள் பாரத தேசமட்டுமல்ல, எத்தனை எத்தனையோ நாடுகள்! ஆனல், கைராட்டைச் சுற்ருமல், பல குமரன்களைச் சாகடிக்காமல், பல பகவத் சிங்குகளைத் தூக்குமேடைக்கு அனுப்பாமல், தடியடி படாமல் இலங்கை சுதந்திரம் பெற்றிருக்கிறது; பாகிஸ்தான் சுதந்திரம் பெற்றிருக்கிறது; அமெரிக்க, பிலிப்பைன், சிரியா மலாயா இஸ்ரேல் முதலிய நாடுகள் சுயராஜ்யம் பெற்றிருக்கின்றன. உலக அரங்கில் அவற்றின் பிரதிநிதிகளும், நேருவுடனும் மற்றையோருடனும் சரிசமமாகத்தான் வீற்றிருக்கிருர்கள். இந்த பலாத்காரங்களைச் செய்யாததினுல் அவர்கள் அந்தஸ்து குறைந்துவிடவில்லை. அதுமட்டுமல்ல. இந்தப் பலாத்காரங்களைச் செய்யாத நாடுகளில் உழைப்பவர்களுக்குக் குறை இல்லை. பஞ்சமில்லை. பட்டினி யில்லை. இந்தியாவுடனேயே சுதந்திரம் பெற்ற பாகிஸ்தான் நமக்கு உணவு அனுப்பமுடிகிறது நமக்குப் பின் விடுதலை பெற்ற இலங்கை, பர்மா இன்ன பிற சுண்டைக்காய் நாடுகள் தமக்கு உணவு விளைவித்துக் கொள்வதுடன், பூசணிக்காய் போலப் பெருத்த நம் நாட்டுக்கும் பிச்சை தருகிறேன் என்கின்றன, ஏன் இந்த மானக்கேடான, பிறர் கேலிக்குரிய நிலை?

நமது முழக்கம்

திராவிட முன்னேற்றக் கழகத்திலே இனி நல்ல வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட இருக்கின்றன, "திராவிட நாடு திராவிடருக்கே" என்பதுதான் நமது மூலாதாரக் கொள்கை—உரிமை முழக்கம்.

டில்லி ஆட்சி, முதலாளிகளுக்கு நல் ஆதரவு தந்து வருகிறது; இது கூடாது. அமெரிக்க ஏகாதிபத்தியம் பாட்டுப் பாடவும், அதற்கு ஒத்து மத்தளம் தட்டிக் கொண்டு பிர்லாக் கோஷ்டி ஆடவும், டில்லி ஆர்ப்பாட்டத்தினுல் ஏற்படும் அலறல் கண்டு மக்கள் வாடவுமான நிலை யிருக்கிறது. "மானுட மழுவாட மங்கை சிவகாமியாட" என்று தொடங்கும் பாடலை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அப்படியே அமெரிக்கா ஆட. டாட்டா...பிர்லா ஆட, டில்லி ஆட, டில்லியுடன் இணைந்த சென்னை சிவகாமியாட, இப்படியெல்லாம் ஆட வேண்டியிருக்கிறது. நாங்கள் கேட்பதெல்லாம் மற்ற எவர் வேண்டுமானுலும் ஆடட்டும, சென்னை சிவகாமி ஆட வேண்டாம்; அவளுக்கும் டில்லி யாருக்கும் இடையேயுள்ள ஆதிக்கக் கயிறை, அடிமைத் தாலியை அறுத்துவிடுங்கள் என்றுதான்! அப்போது மங்கை சிவகாமி ஆடமாட்டாள். ஆடினுலும் தானுக ஆடட்டும், ஆட்டி வைத்து ஆடவேண்டாம்.

பாட்டாளி மக்கள் விடுதலை விழா, மே தினம். அதற்குக் கட்சி எல்லை, நாட்டு எல்லை எதுவும் இல்லை. பாட்டாளி மக்களுக்கு உரிமையுள்ளதாகக் கூறப்படும் நாடுகளெல்லாம் அதன் எல்லைக்கு உட்பட்டவையே. பாட்டாளிகளின் இனத்தவர், அவர்களை ஆதரிக்கும் கட்சியினர் யாவரும் அதைக் கொண்டாடும் உரிமையுள்ளவர்களே. பாட்டாளிகளின் வாழ்வுக்காக, விடுதலைக்காக, உரிமைகளுக்காக மே தினத்தைப் பாட்டாளிகளும், பாட்டாளி இனத்தவருமாகிய நாம் கொண்டாடுகிருேம்.

∴

அண்ணாவைப் பற்றி

"தம்பி வா! தலைமை ஏற்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன் என உறுதிகூறுகிறேன் வா!"

-அண்ணு

"மகனே வா!' என அழைத்துத் தலைமையில் அமர்த்துகின்ற தந்தையை நாம் பெறத் தவறிவிட்டாலும், 'தம்பி வா! என அன்புடன் அழைத்துத் தலைமையை ஒப்படைக்கின்ற அண்ணனை நாம் பெற்றிருக்கிருேம். அத்தகைய அண்ணனை நாம்! நம் வாழ்நாளில் இழக்கத் துணியமாட்டோம்"

- ஈ. வெ. கி. சம்பத்

இவ்விரண்டு வாயுரைகளும் கருத்தாழம் கொண்டவை. இருவகைப் பண்பட்ட உள்ளங்களைத் தெளிவுபட நமக்கெல்லாம் சுட்டிக்காட்டுபவை.

திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில், கழகத்தின் தலைவராக நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை வழிமொழிந்த நேரத்தில், அறிஞர் அண்ணு அவர்கள் நல் இதயத்திலிருந்து பொங்கி வழிந்தவையாகும்.

தாம், தம் அருஞ்சொல்லாலும் எழுத்தாலும் தன்னல மறுத்த செயலாலும் பெற்ற தமிழகத்தின் தலைமையை, தம்மரும் தம்பிமார்களில் தலைசிறந்த ஒருவரிடம் ஒப்படைக்கின்ற நற்செய்தியை மட்டும் குறிப்பிட்டுக் காட்டுவதோடு அண்ணுவின் அச்சொற்ருெடர்கள் அமைந்திடவில்லை' அச்சொற்ருெடர் அண்ணுவின் அன்புள்ளத்தையும், விரிந்தமனப் பாங்கையும், சனநாயகத் தத்துவத்தில் அவருக்கிருந்து வருகின்ற பற்றையும் மிகத் தெரிவிப்பனவாகும்.

மற்ருென்று, அண்ணுவிடத்துப் பொதுவாகக் கழகத் தோழர்களும், குறிப்பாகச் சிறப்புக்குரிய தம்பிமார்களும் வைத்திருக்கின்ற நம்பிக்கை' கொண்டிருக்கின்ற தொடர்பு, பெற்றிருக்கின்ற பற்று எத்தகையது என்பதைக் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டுவதாக அமைந்திருக்கிறது, அதே மாநாட்டில் இளவல் சம்பத் அவர்கள் உதிர்த்திருக்கின்ற பொன்மொழிகள்.

செல்வர்கள் விளையாடும் பெரும் விளையாட்டாக இருந்து வந்த தமிழக அரசியலை உண்மையான மக்கள் அரசியலாக மாற்ற அமைந்த பெருமை முழுதும் அண்ணுவையே சார்ந்ததாகும்.

மாளிகையிலே கொலுவீற்றிருந்த அரசியலை மண்குடிசைக்குச் கொண்டுவந்த பெருமை முழுதும் அண்ணுவுக்கே சொந்தமாகும்.

('நம் நாடு' பொறுப்பாசிரியர் காஞ்சி கலியாண சுந்தரனுர் அவர்கள், திருச்சி மாநில மாநாட்டுப் பிறகு, தீட்டியது.)

...0...

திராவிட நாடா! தமிழ்நாடா !!

[சென்ற இதழ் தொடர்ச்சி]

சம்பத் நடத்திய கோவை மாநாட்டுக்குக்கூடக் கலைஞர்கள் வருந்தி வருந்தி அழைக்கப்பட்டார்கள் — ஒவ்வொரு நடிகர் வீடாக அவரே போய் ஏறி இறங்கி வந்தார். ஆனால், கருணாநிதி முன்னின்று நடத்திய திருவாரூர் மாநாட்டுக்கு, எந்தக் கலைஞரும் வரவில்லை. இருந்தாலும் இருபதினாயிரம் ரூபாய் மிச்சம் கிடைத்தது! அவ்வளவு மக்கள் வந்தார்கள்!! ஆகவே, நடிகர்களுக்காகத்தான் கூட்டம் கூடுகிறது—அவர்களைக் காட்டித்தான் கழகத்தை வளர்க்கிறோம்'' என்பது எவ்வளவு பொருந்தாத கூற்று, என்று எண்ணிக் கொண்டே கூட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றினேன். அப்பப்பா! எவ்வளவு பெண்கள்- அனைவரும் எவ்வளவு ஆர்வத்தோடு கூடியிருந்தனர். தலைவர்களின் பேச்சைக் கேட்டனர் தெரியுமா? இப்படிப்பட்ட கழகத்தையா ஏசியும், பேசியும் அழித்திடப் போகின்றனர், போகாத ஊருக்கு வழி சொல்லும் அன்பர்கள்!!

கழகத் தோழர்கள் பேசிய பிறகு கடைசியில், அண்ணா பேசினார். நான் நின்ற இடத்தில் பலர் கண்களைத் துடைத்துக் கொண்டதைப் பார்த்தேன். அண்ணா பேசினார்;

"புதுக் கட்சி ஆரம்பித்ததும், நான் இதுவரையில் சம்பத்தை அவன் இவன் என்று சொல்லி வந்ததை விட்டு, 'அவர்' என்று அழைக்க ஆரம்பித்தேன்! தோழர் சம்பத், இத்தனை நாட்களும் என்னை 'அண்ணா' என்றழைத்ததுபோல் இனியும் அழைத்தால் தனது புதுக் தகுதிக்குப் பொருந்தாது என்று என்னை 'அண்ணாதுரை' என்று அழைக்க ஆரம்பித்திருக்கிறார்!; பன்னிரண்டு ஆண்டுகள் அப்பாவிடம் வசவுகள் கேட்டேன்-- இப்போது பிள்ளையிடமும் திட்டுக் கேட்கவேண்டும் போலிருக்கிறது"

இதைச் சொன்ன போது, அண்ணாவின் குரல், கரகரத்தது! அனைவரும், "ச்சு! ச்சு!!" என்று, சொல்லி, அண்ணாவின் வேதனை கண்டு, மனமுருகினர். உண்மையில், என் கண்களில் நீர்வழிந்தது என்னைப் போன்றே ஆயினர், தோழர்கள் பலர்!! இந்த பந்த பாசத்தை எண்ணினேன். அண்ணாவிடம், மக்கள் வெள்ளம் கொண்டிருக்கும், அன்பினை நினைத்தேன். இந்த அன்புக்கு அணைபோடவோ முடியும், அற்பர்களால், என்றெண்ணியபடி, தங்கியிருந்த விடுதிக்கு, விரைந்தேன். அப்படி வந்தபோது கலைந்து சென்ற கூட்டம், பேசிக் கொண்டு போனதைக் கேட்க நேர்ந்தது. எல்லோரும் உருகி உருகிப் பேசிக் கொண்டு போனார்கள்—என்னய்யா, இந்த சம்பத்!- எவ்வளவு சில்லரைப் புத்தியிருந்தால் இத்தனை நாளும் பழகியவரை ஒரே நாளில் மரியாதைக் குறைவாகப் பேசும் மனம் ஏற்படும்—எனக்குத் தெரியுமய்யா, இந்த சம்பத், கழகத்திலிருப்பதே கெடுக்கத்தான் என்பது; அப்படியே ஆசாமி செய்து விட்டார்— ஆமாம்! தமிழ் தேசீய கட்சியாமே என்னய்யா பெயர் — 'தமிழ்த் தேசீய என்றிருக்க வேண்டாமோ? 'த்' இருக்க வேண்டாமோ!—அட, போய்யா, தமிழின் மீது அன்பிருந்தால் 'தேசீயம்' வருமா தேசீயம்— சீச்சி! வஸ்தாது முண்டா தட்டிக்கொண்டு கிளம்புவது போலிருக்கிறதே ஒழிய கட்சி நடத்தும் பெருந்தன்மை தெரிகிறதா? இருந்தால் வேண்டுமென்றே, இன்னைக்கு, இங்கே புதுக் கட்சி ஆரம்பிப்பதாகப் 'போஸ்டர்' ஒட்டி, கழகத்திலிருந்து கம்யூனிஸ்டுக்குப் போய் அங்கே அவர்கள் கழுத்தைப்பிடித்துத்தள்ள வேறு வழியில்லையென்று இருக்கும் இந்தத் தூத்துக்குடி நடராசனை நம்பிக் காரியம் செய்யச் சொல்வாரா— 'மிட்டாய்' கொடுக்காவிடில் கோபித்துக் கொண்டு சாக்கடையில் இறங்கி கண்மண் தெரியாமல் தன் மீதும் போவோர் வருவோர் மீதும் வாரிவாரி இறைக்கும் வம்பன்புத்திதானே புரிகிறது —இப்படிப் பேசிக் கொண்டு, சென்றனர், மக்கள்! வழியெலாம் கழகத் தோழர்கள் செய்திருந்த அலங்காரங்கள் தெரிந்தன— 5000 வாழை மரங்களால் தோரணம் கட்டப்பட்டது என்றார்கள்-- அடுக்கடுக்காக ஊர் முழுதும் கட்டப்பட்டிருந்த வளைவுகளைத் தாண்டி வரும் போதே என்னையறியாமலே ஒரு ஆனந்தம் ஏற்பட்டது. "இப்படைத் தோற்கின், எப்படை ஜெயிக்கும்", என்று அடிக்கடி அண்ணா சொல்வது ஞாபகம் வந்தது. நிச்சயம், இப்படை ஜெயிக்கத்தான் போகிறது நேரு பண்டிதர் — காமராசர் — பெரியார்—இவர்களெல்லாம் ஏற்றுக் கொள்ளாதபோது, எம் உள்ளத்தூய்மையின் சின்னம் எமது கொள்கை, இதை இழக்கோம் என்ற நாம், இந்த சம்பத்துக்காகவா விட்டுவிடப் போகிறோம்? ஒரு நாளுமில்லை! சொல்வதில், நேர்மையிருந்தால்கூட, நினைத்தும் பார்க்கலாம். நேற்று வரையில் 'திராவிட நாடு' எனக் கூவிவிட்டு, விடிந்ததும், சேச்சே! அது தேவையில்லை! என்றால், 'ஆமாம்' போட நாமென்ன பகுத்தறிவற்றவர்களா?

எனக்கு சாத்தூர் ஓட்டல் தொழிலாளரின் சங்கநாதமே இப்போதும் நினைவுக்கு வருகிறது அவரைப் போல, நாம் கருத்து விளக்கமும், ஒற்றுமைப் பண்பையும் கொண்டு பாடுபட்டால், விட்டிற்பூச்சிகள் விலகும்! வெண்ணிலா முளைக்கும்! இருள் ஓடும்! இப் பணியில், ஈடுபடுவோம் தோழர்காள் எனச் சொல்லிக் கொண்டே, ரயிலேறினேன் சென்னைக்கு.

அடடா, என்ன கூட்டம்! என்ன கூட்டம்! என்னப்பா, இந்த சம்பத்—பாலை உருட்டி விட்டாரே—தாழியை உடைத்த தகாத ஆளப்பா—ஊம், என்ன செய்ய முடியும்? அவர் கூட உள்ள ஆட்களைப் பார்த்தால் தரம் தெரியவில்லையா—என்றே, அக்கூட்டத்திலும், வாதித்துக் கொண்டிருந்தார்கள். சம்பத்தின் போக்கு பற்றி அவர்கள் பேசியதைக் கேட்க, வேதனையாயிருந்தது! என்னயிருந்தாலும் பழகியிருக்கிறோமே!! "ஆமாம்! அவர் அதை நினைத்தா பேசுகிறார்", என நீங்கள் கேட்கக் கூடும். தங்கள் தரத்தைத் [illegible]ங்களோடு கொண்டு போ[illegible]பிருக்கிறவர்கள், அவர்கள். தங்[illegible]கர் கொள்கையைக் கொண்[illegible]ல் தங்கம் போன்ற உள்ள[illegible] கொண்டவர் நாம்!! நம்முடைய தரத்தை, நாம் இழந்துவிட மு[illegible]மா. போகட்டும், புத்தியை [illegible]வைத்த புண்ணியவான்கள் [illegible]ம், நமதுவேலையைச் செய்[illegible]ம்!!

"சந்தா விவரம்"

அதிகப்பிரதிகள் வேண்டுவோர், ஒவ்வொரு செவ்வாய்கிழமைக்குள்ளும், தெரிவிக்கவும்: முன்பணத்தோடு வருபவைகளே, முதலிடம் பெறும்.

சந்தா விபரம்

* * *

ஓராண்டு	—	ரூ.	8
அரையாண்டு	—	ரூ.	4

*ஆசிரியருக்கு எழுதுவோர், அவர்பெயரிட்டும், பொறுப்பாளருக்கு எழுதுவோர், பொறுப்பாளர் - அறப்போர், எனவும் ' எழுதுக.

பொறுப்பாளர் "அறப்போர்" சென்னை-24

எதிரொலி

பெண்ணாகவிருந்த மாரியாயி ஆணாக மாறிய அதிசயம் !

—செய்தி

ஃ இஃதென்ன அதிசயம்! பசுவாகவிருந்த காங்கிரஸ் இன்று காளையாக மாறிவிட்டதே, இது வல்லவோ அதிசயம் என்கிறார் ஆச்சாரியார்!

*

ஆந்திரக் காங்கிரசுத் தகராறுக்கு மேலிடம் பொறுப்பல்ல!

—இந்திரா காந்தி

ஃ ஏகப்பட்ட தகராறுகளுக்கு மேலிடமே பொறுப்பாக இருக்கும் பொழுது, இந்தத் தகராறுயெல்லாம் 'அது' எப்படி பொறுப்பேற்றுக் கொள்ளும்?

*

வெளிநாடுகளில் தமிழர்கள் கேலிப் பொருளாகக் கருதப் படுபடுகின்றனர்!

—அண்ணா வருத்தம்

ஃ ஆனால், வடநாட்டில் தமிழர்கள் 'கோலி'ப் பொருளாகக் கருதப் படுவதென்னவோ உண்மை!

*

மக்களின் நன்மையைக் கருதியா, அமைச்சர்கள் உலா வருகின்றனர்?

—அன்பழகன் கேள்வி

ஃ இல்லவேயில்லை' மக்களின்கண்களுக்கு மையைப் பூசத்தான் வருகின்றனர். என்கிறான், இவர்களின் இலட்சணத்தை உணர்ந்துகொண்ட கிராமத்து முனியன்!

*

விமானக் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் யோசனை!

—சுதேசமித்திரன்

ஃ கட்டணம் உயர்ந்தால், விமானங்களும் அதிக உயரமாகப் பறக்குமோவென யாரும் நினைக்க வேண்டாம்!

*

பணம் போயின் பிணம்!

—தமிழ் நாடு இதழில் தலைப்பு

ஃ பிணம் போயின் பலருக்குப் பணம் வருகிறதே!

*

கனா, கீன்யா, மாலி ஆகிய மூன்று ஆப்பிரிக்கா நாடுகளும் ஒன்று சேர்ந்து யூனியன் ஒன்றை அமைத்துள்ளன!

—தினச்செய்தி.

ஃ தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு நாடுகளும் ஒன்று சேர்ந்து ஒரு திரரவிட யூனியன் அமைத்துக் கொள்வதை எதிர்க்கும் 'மூளை' மேற்கண்ட செய்தியைப் படித்தேனும் தாங்கள் மூளையைத் திருத்திக் கொள்வாரா?

"அன்பு வாணன்"

—0—

கேள்வி

பதில்

கே: தி. மு. கவிலிருந்து மற்ருெரு கட்சி பிறந்தது குறித்து அதிக மகிழ்ச்சி அடைந்தது காமராஜரா? இல்லை, பெரியாரா?

எம். குமார்—புனு—3.

ப: டில்லியை எதிர்க்க ஒரு 'எம். பி.' குறைந்தது பற்றி காமராஜர் மகிழ்வார். தன்னைப் போலத்தன் அண்ணன் பிள்ளையும் ஆகிவருவதைக் கண்டு பெரியார் மகிழ்வார்.

*

கே: அறிஞர் அண்ணாவின் குடும்பத்திலே இப்படிம் ஒரு தம்பி இருப்பாரென்று தெரியாமல் போய்விட்டதா? அல்லது தெரிந்தும் திருத்திவிடுவோமென்று இருந்தார்களா?

—கே. எஸ். இராஜம்

6- சி. கோடம்பாக்கம்.

ப: தி. மு. க. ஆரம்பமான நாளில் கலைவாணர் என்- எஸ். கே. ஐயைப்பற்றி இல்லாததையெல்லாம் அண்ணாவிடம் சொல்லி, அண்ணாவுக்கும் என். எஸ் கே க்குமிடையில் 'பெரிய பிளவு' ஏற்படும்படிச் செய்தார், சம்பத். அண்ணாவின் நெருங்கிய நண்பரும் அந்தச் சமயம் எங்கே அண்ணா போனாலும் 'கார் ஓட்டி' யாக வருபவருமாக இருந்த காஞ்சிபுரம் பிரபல வியாபாரி திரு புட்டாசாமி என்பவர், 'சம்பத்தால், ஒரு நாளைக்கு கழகம் உடையும்' என்ருர். இது பனிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு! அண்ணாவுக்கும் சம்பத்துக்கும் இருந்த தொடர்பை வைத்து, நானெல்லாம் அப்படி எதுவும் நடக்காது என்றே இருந்தேன். இப்போது யோசித்தால், ஒவ்வொரு காரியமும் சம்பத், திட்டமிட்டே செய்திருக்கிருரெனத் தெரிகிறது. சிவாஜி கணேசன் கழகத்திலிருந்தபோது, கழக நிதிக்காகவும் புயல் நிவாரண நிதிக்காகவும் கருணாநிதியுடன் சேர்ந்து நடித்துப் பணம் சேர்க்க உதவியபோது, அவரைப்பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, அண்ணாவின் மனதைக் கலைத்ததும்; 'சொர்க்க வாசல்' கம்பெனியில் உட்கார்ந்துகொண்டு கணேசனின் மண்டைக்கனத்தைக் உடைக்கவே தான் 'சிவாஜி' வேடம் போடுவதாகச் சொன்னதும், அண்ணாவிடம் வலியுறுத்தித் தானே அவ்வேடத்தைப் போட்டுக் கணேசுவுக்கு மனம் புண்படும்படிச் செய்ததும்; வி. பி. ராமனைக் கட்சியில் சேர்த்தது பிசகு என்று அண்ணாவுக்கும் ராமனுக்கும் நட்பு அரும்பியபோது டில்லியிலிருந்து லெட்டர் எழுதிவிட்டு, அக்கடிதம் கண்டு அண்ணா தொடர்பை குறைக்க ஆரம்பித்ததும் தான் போய் ராமனை நெருங்கிய நண்பராக்கிக் கொண்டதும்...இப்படிப் பல நிகழ்ச்சிகளை எண்ணினால், அண்ணாவைவிட்டு ஒவ்வொருவராகப் பிரிக்கவே முயற்சித்திருக்கிருர் என்பது, இப்போதுதான், தோழரே, தெரியவருகிறது. உள்ளத்தில் வஞ்சகத்தோடு, மிகவும் அருமையாகப் பழகி வந்திருக்கிருர் 'தம்பி' என்று!!

*

கே: திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு, அன்று முதல் இன்றுவரை, தொடர்ச்சியாக அறப்போரில் எழுதுவீர்களா?

—சாரதி, 44. பிக்சர் பசார் ரோடு, சிவாசி நகர், பெங்களூர்.

ப: தோழர் டி. எம். பார்த்தசாரதி எழுதிய 'தி. மு. க. வரலாறு' நூலில், விபரம் உள்ளது. பாரி நிலையம்—சென்னை எனும் முகவரிக்கு எழுதுங்கள்.

*

கே: ஈ. வி. கே. சம்பத், சென்னையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் சொன்னரே, தி. மு, க. நான் கட்டிய வீடு. அதை இடிக்கவுமாட்டேன். வீட்டை விட்டு போகவு மாட்டேன். புதிய வீடு கட்டவுமாட்டேன்' என்னை வீட்டை விட்டுத்தள்ளினாலும் போகமாட்டேன். அப்படித் தள்ளினாலும் வீட்டுத் தாழ்வாரத்திலாவது, இருப்பேன்'' என்று. ஏன் புதிய வீடு கட்டினர் என்பதை தெரியப் படுத்தவும்.

—க. கந்தசாமி.

மங்கலூர், தஞ்சை மாவட்டம்,

ப: அந்த 'இரகசியம்' தான் என்னவென்று புரியவில்லை; முதல் நாள்வரை திராவிடநாடு கேட்டவர், மறுநாளே 'திராவிட நாடு பகல் கனவு!' என்கிருர் என்ருல், எது காரணமாயிருக்க முடியும் என்பதை நீங்களே முடிவுசெய்து கொள்ளுங்கள்!!

*

கே: அண்ணா வைத்துள்ள கார், கட்சி வாங்கிக் கொடுத்தது தானே?

—கணேசன்—காரைக்குடி

ப: உண்மையைச் சொன்னல் அண்ணாவிடம் இப்போது காரே கிடையாது. ஒட்டையாக இருக்கும் 4758, 'வேலைக்காரி' கதையை தமிழ் தவிர்த்த பிறமொழிகளில் எடுப்பதற்காக ஜுபிடர் வாங்கிக் கொடுத்தது. சினிமாவுக்குக் கதை எழுதி, வந்த கார் என்பதால், அது சினிமா ஸ்டுடியோவுக்கு போய்க் கொண்டில்லை என்பதும் — அதற்கான 'பெட்ரோல்' கூட 'திராவிட நாடு' அடிகளால் வழங்கப்படுகிறதென்பதும, உங்களுக்கு எப்படித் தெரிய முடியும்!!

*

ஆசிரியரும், வெளியிடுபவரும் :- இராம. அரங்கண்ணல், சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி 3-40 முல்லை அச்சகம் மவுண்ட்ரோடு சென்னை-6

...ரசும் "சுயநலமே" ...ர் பெருமையை !!



...உவத்தலின்றி நடு ...ன்று மதிப்பிட்டால் இலட்சத்திலிருந்து ...ட்சம் வரை சொல்ல ...வலத்தில் இருந்தோ ...கையை.

...கைப்- பரப்புச் செயலா ...லர் நெடுஞ்செழியன் ...தாங்க, பொதுச் செயலாளர் அண்ணா அவர்களும் ஏனைய செயலாளர்களும், கழகப்பாராளுமன்றஉறுப்பினரும் சட்டமன்ற உறுப்பினரும் உடன்வர, நடைபெற்ற இந்தப் பவனி இலங்கைத்தமிழர் பால்நாம் காட்டும் ஆதரவையும், சிங்கள அரசுக்குத் தெரிவிக்கும் கண்டனத்தையும உலகத்திற்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

மாநாட்டை யொட்டியோ, மற்ற விழாக்களை யொட்டியோ நடைபெறும் ஊர்வலங்களில் மகிழ்ச்சியும் உணர்ச்சியும்தான் மிகுந்து காணப்படும்; ஆனால் இந்த ஊர்வலத்தில் அவற்றை விட அதிகமாக எழுச்சிக் காணப்பட்டது.

இவ்வூர்வலத்தைக் கண்டவர்களுக்கெல்லாம் சிங்களஞ் சேர் தென்னாட்டு மக்கள் தீராதிதீரர் என்ற உணர்வும், பொங்கு தமிழருக்கு இன்னல் விளைவித்தால் சங்காரம் நிசமென்று பாடிய பாட்டின் நிலையும் ஏற்படாமலிருக்க முடியாது.

அண்ணா காட்டும் அறவழி பிறழாமல், கட்டுப்பாடு குலையாமல், கண்ணியம் காத்துக் கடமையாற்றினர் ஊர்வலத்தினர்.

ஊர்வலத்தின் நடுவே வந்த ஜீப் கார்மீது அறிஞர் அண்ணா அமர்ந்து புன்சிரிப்புடன் வந்த காட்சி; 'தம்பியுடையான் படைக்கஞ்சான்; இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்று அவர் உள்ளம் சொல்லுவது போல் இருந்தது.

அரசியலில் 'வாழாவெட்டி'களும் 'வாழ்ந்து கெட்டது' களும் தனித்தலைமை தேடிச் செல்லாக் காசாக ஆனதுகளும், இந்த ஊர்வலம் கண்டு வயிற்றெரிச்சலால், வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொள்கின்றன.

'ஊர்வலத்தினரின் வன்செயல் 'செருப்பு வீச்சு' 'கல்வீச்சு' என்றெல்லாம் கூறி, நடவாததை நடந்ததாகக் கற்பித்துக் கத்துகின்றன. அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்து முடிந்துவிட்ட இந்த ஊர்வலத்தைக் களங்கப் படுத்திட எண்ணி முன்கூட்டியே திட்டமிட்டு வைத்திருந்த படிச் செய்து, அதிலே ஒரு தனி

(8-ம் பக்கம் காண்க)

கள்ளமிலா உள்ளத்தார்-எனவே கடும் வெயிலில் புறப்பட்டார்!



நாவலர், சகோதரர் மு, க', தர்மலிங்கம், எம்'பி, கே. ஆர் .ஆர் மனோகரன், சி. பி. சி. மதுரை முத்து முதலியோர்]

...! மாவீரர் படையை! எமது குடும்பத்தை!



புகைப்படம்

அமிர்தம் சாமுவேல்



நீங்களும் நானும்

உடன் பிறந்தோரே !

யார் போனால் என்ன ?--என்று நீங்கள் எழுதியனுப்பும் கடிதங்களை யெல்லாம் போட இடமில்லையே என்று ஏங்கும் என்னை மன்னியுங்கள். உங்களைப் போன்றோரின் அன்பும், இலட்சிய உறுதியுமே, கழகத்துக்கு இரத்தமும் சதையுமே ஒழிய, "இடையிலே வந்து தலைவரான பின் இடம் தேடி ஓடும் சுயநலமி"கள் அல்ல. உங்களது கடிதங்களைப் பற்றி நமது வழிகாட்டி அண்ணாவிடம் அவசியம் சொல்லுவேன்.

"அறப்போர்" இதழின் வனப்பு கண்டும், கட்டுரைகள் பற்றியும், என்னை வாழ்த்தி, வாராவாரம் எழுதும் என்னருந் தோழர்களுக்கு, என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டுகிறபோது, மகிழ்ச்சி ஏற்படுகிறது. எனினும், "நீங்கள் என்னென்னவேண்டும் ?" என்று விரும்புகிறீர்கள் என்பதை எழுதக் கூடாதா? உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற நிச்சயம் முயல்வேன். ஒரு சகோதரர், 'கடிகாரம்' போல ஒரு தொடர் கதையை ஆரம்பிக்கலாதா, என்று கேட்டிருக்கிறார், அவர் விருப்பம், என்னைத் தூண்டிவிட்டிருக்கிறது. விரைவில் எழுதுகிறேன்.

,'என்னண்ணா ! ஆந்திரம்---கன்னடம்-- தெலுங்கு-- முதலிய மொழிக் கதைகளைத் தரப்போவதாகச் சொன்னீர்களே ? வரவில்லையே !!" என்று தாம்பரம் சரோஜா எனும் சகோதரி, கேட்டிருக்கிறார். அதே சமயம் திருவேங்கிடம் எனும் அன்பர், "நீங்கள் நிறைய அரசியல் எழுத வேண்டும். அதைத்தான் அறப்போரில் எதிர்பார்க்கிறோம்," என்று அன்போடு கட்டளையிடுகிறார். இரண்டு கட்டளைகளையுமே நான் பூர்த்தி செய்ய முயல்வேனென உறுதி கூறுகிறேன். திராவிட நாடா ?—என்று சில சுயநலமிகள் கேள்வி எழுப்பக் கிளம்பியிருக்கும் இச் சமயத்தில், இலக்கிய உலகில் என்னாலியன்ற அளவுக்கு, நிச்சயம் தொடர்பு கொண்டு, அம் மொழி எழுத்தாளர்களையும் நம் கருத்தின் அருமையைப் புரியும்படிச் செய்ய வேண்டும் என்பது என் ஆசை. கதைகள் மட்டுமின்றி, "திராவிடம்" பற்றிச் சகோதர மொழி அறிஞர்களை நாடி, விரைவில், அவர்தம் கருத்துக்களையும் — எழுத்தாளர்களின் மூலம் கதைகளையும், நிச்சயம், பரிமாறுகிறேன் என்று உறுதி கூறுகிறேன்.

பேராவூரணி தோழர் அடைக்கலம், இந்த கிழமை எட்டுச் சந்தாக்களை சேர்த்து அனுப்பி, இன்னும் வரும் என்று என்னை உற்சாகமூட்டிருக்கிறார்.

பயந்துகொண்டே அடியெடுத்து வைத்தேன் — பனிக் கரங்கள் என்னை மகிழ்விக்கின்றன— என்ன சொல்வேன் உங்கள் அன்பை !!

இதழ் ஏன் காலதாமதமாகிறது--என்று கேட்பீர்கள். என் தவறோ, அச்சகத் தோழர்கள் தவறோ, கொஞ்சமும் இல்லை. அறப்போருக்கென ஒரு அச்சு இயந்திரம் அமைக்கும் முயற்சியால், காலதாமதமாகிவிட்டது. அலுவலக நிர்வாகத் தோழர்கள் நம்முடைய இயந்திரத்திலேயே அடிப்போம் என்று முயன்றனர். மின்சார வசதியின்மையால், கையாலேயே சுற்றவேண்டி வந்து விட்டது. அதனால்தான் தாமதம். இன்னும் இரு கிழமைகளில் மின்சார வசதியும், மின் பொறியும் கிடைத்து விடும். மணிக்கு இரண்டாயிரம் அடிக்கும் இயந்திரம் வந்துவிட்டால், நாள் ஒன்றுக்கு இரண்டாயிரம்வீதம் ஆள்மூலம் அசைத்து அசைத்துத் தள்ளவேண்டியிராதன்றோ! எனினும், இதழ் சனிக் கிழமைக்குள் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளேன் என்பதையும், மின் பொறி வசதியமைந்ததும் இன்னும் சீக்கிரம் உங்கள் கைகளில் 'அறப்போர்' கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"என்ன இது! அதிகக் காப்பிகள் கேட்டால் அனுப்பவில்லையே ?"—என்று குறைபடும் விற்பனையாளத் தோழர்களுக்கும் மேற்கண்ட பதிலைத்தான் கூறவேண்டியுள்ளது. இன்னுமொன்று : முன் பணமில்லாமல் வருகிற அதிகப் பிரதிகள் கோரிக்கையை, அலுவலகத்தார், உடன் கவனிப்பதில்லை. பட்டியல் வராவிடில், உடன், பத்திரிகையை நிறுத்தும்படியும் நான் சொல்லியுள்ளேன். நிறையச் செலவு செய்து நடத்தும் இந்த நிலையில், இவ்விஷயத்தில், அலுவலகத்தார், கடுமையாகயிருக்க நானே காரணம். நான் என்ன 'சம்பத்தா!' அப்பன் பாட்டன் சம்பாதித்து வைத்ததில் குளிக்கிறேன் என்று சொல்லிக் கொள்ள. எழுதிப் பிழைக்கிறவன். அதனால் கண்டிப்பாயிருக்க வேண்டியுள்ளது. மன்னியுங்கள், தவறிருந்தால் !!

அடிக்கடி, எதுபற்றியும், யாரும் என்னுடன் தொடர்பு கொள்வதை நான் "பாக்கியமாக"க் கருதுகிறேன். எழுதுங்கள். எழுதும்போது, என் பெயரிட்டு, தயவு செய்து எழுதுங்கள்.

உங்கள் எழுத்து ஊழியன்,

அரங்கண்ணல்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

மகிழ்ச்சி காணும் 'தனித் தலைமை' களின் போக்கை நினைத்தாலே வேடிக்கையாக இருக்கிறது.

பின்னர், அண்ணா அவர்களும் நெடுஞ்செழியன் அவர்களும் நன்றி தெரிவிக்கும் வகையில் சிறிது நேரம் உரை நிகழ்த்திய பிறகு ஊர்வலம் அமைதியாகக் கலைந்தது.

(ந. நி)

...0...

திருத்தம்- இந்த இதழ் முதற்பக்கத்தில் 3-கலத்தில் 'குழந்தையை என்று ஆரம்பிக்கும் இடத்துக்கு முன் 'பேராவூரணி தோழர்' என சேர்த்துக் கொள்க.

"புதுக்கட்சி" சதி அம்பலம்

முற்போக்கினரை முறியடிக்கத் திட்டம்

சுயநலமே ஈரோட்டுச் சுபாவம்?

போர்க்கோலம் பூண்டு புதிய கட்சி தொடங்கிய போலிகளின் முகமூடிதனை கிழித்தெறியப் பயன்படும் எனக் கருதி, மதுரையிலிருந்து வெளி வரும் "கண்ணகி" என்ற வார ஏட்டில் "சம்பத் விலகியதற்கு கொள்கை வேறுபாடுகள்தான் காரணமா?" என்ற தலைப்பில், சார்லஸ் சந்திரமோகன், பி.ஏ., அவர்கள் எழுதிய கட்டுரையின் சில பகுதிகளை தந்துள்ளோம்'

அண்மையில் வடநாட்டின் பல்வேறு பத்திரிகைகளில் ஓர் சுவை மிக்க செய்தி வெளியாகியது. நாட்டைத் துண்டாடும் கொள்கைகளைக் கொண்ட சில அரசியல் கட்சிகளின் 'பெருந் தலைகளை' எவ்விதமோ மயக்கி, பணமோ, பதவியோ, பயமுறுத்தலோ ஆகியவை கொண்டு தன் பக்கம் இழுக்க காங்கிரஸ் முயல்வதாகவும், இதில் பெரும் புள்ளிகள் ஈடுபட்டிருப்பதாகவும் தகவல் கிடைத்தன. தென்னகத்தின் திராவிடம் கேட்கும் தி. மு. க.வும், வடகிழக்கே நாகநாடு கேட்கும் பிஜோவின் கட்சியினரும், பெருந் தலைவலிகளாக மாறின. இத்துடன் தாராசிங்கின் 'பஞ்சாபி சுபா' கிளர்ச்சிகளும், வங்காளத்தில் மொழியின் பெயரால் நடைபெற்ற கிளர்ச்சிகளும் இந்தியாவின் எதிர்காலத்தை பல சுக்கல்களாக ஆக்கிவிடுமோவென காங்கிரசார் மட்டுமல்ல, அவர்களின் ஆதரவில் கொழுத்துவரும் ஆலை அதிபர்கள், வாணிப முதலாளிகள் அச்சம் கொண்டனர். 'இந்தியா ஒன்று' என்பதில்தான் அவர்களின் வாழ்வு அமைந்திருக்கிறது. இந்தக் கட்டுக்கோப்பு உடைந்தால் பண ஊற்றும் நின்றுவிடும். இதனை தர்க்கரீதியில் தடுக்காமல், குறுக்குப் பாதையில் குள்ளநரிச் செய்கையால் தடுக்க முயன்றனர். அதன் விளைவுதான் இப்படிக் கட்சிகளின் ஒரு சில தலைகளுக்கு கிராக்கி ஏற்பட்டது.

*

திராவிடநாடு என்பது கனவு என்றும், அது கிடைக்காது என்று தான் பல ஆண்டுகளுக்கு முன்பே அறிந்து விட்டதாகவும், எனவே இந்தக் கொள்கை வேறுபாட்டின் காரணமாக தி. மு. க.விலிருந்து விலகுவதாகக் குறிப்பிடுகிறார் !

ஓர் கொள்கையை விடுவதானால் அந்தக் கொள்கை தவறானது — தீங்கு இழைக்கக் கூடியது என்பதை நிரூபிக்க வேண்டும். அப்படி இல்லாமல் திராவிடநாடு கிடைக்காது, எனவே அக் கொள்கையை கை விடுகிறேன் என்பது கையாலாகாதவர்கள் செய்யக் கூடியதே தவிற, அரசியல் தலைவர்கள் செய்யக்கூடியதல்ல.

இது ஒருபுறமிருக்கட்டும்.

வேலூர் பொதுக் குழுவிற்குப் பிறகு மதுரையில் 8—1—61--ல் டாக்டர் அருணாசலம் அவர்களின் தல்லாகுளம் பங்களாவிலே பத்திரிகை நிருபர்கள் பலர் சம்பத்தைப் பேட்டி கண்டனர். அதுபோது இந்தியன் எக்ஸ்பிரசின் நிருபர் சம்பத்தை நோக்கி பல கேள்விகள் கேட்டார். அதில் "உங்களுக்குக் கொள்கையில் ஏதாவது வேறுபாடு உண்டா ?" ஒரு கேள்வி வந்தது. அதற்கு சம்பத்,

"கொள்கையில் வேறுபாடு ஒன்றும் இல்லை. திராவிடநாடு அடைவது என்பது மிகப் பெரிய குறிக்கோள். அதனை அடைய சகல சக்திகளையும் பிரயோகிக்க வேண்டும். ஆனால் கட்சி அதனை நோக்கிப் போகும் பாதையிலிருந்து விலகி, இடையே இருக்கும் சுக போகங்களை அனுபவிக்க நினைக்கிறது. இதனை தடுத்து நிறுத்துவதே எனதுநோக்கம்" என்றார் !

நிருபரிடம் அப்போது பொய் கூறி இருக்கிறார், அல்லது எதனையோ மறைத்திருக்கிறார். நேர்மையான அரசியல்வாதியாக இருந்தால், 'எனக்கு கொள்கையிலும் ஒரு சில வேறுபாடுகள் இருக்கின்றன' என்று பொதுப்படையாகக் கூறியிருக்கலாம். அப்போதும் வாய்மூடி மௌனியாக இருந்துவிட்டு, கடற்கரை கூட்டத்திலே ஆர்ப்பரிக்கின்றார்—58--59லேயே 'ஞானோதயம்' ஏற்பட்டதென்று ! அவரது சகாக்களும் 'ஆமாம் எனக்கும் அப்படித்தான்' என்று தலை ஆட்டுகின்றனர்...."

வில்லை இரு புருவமாக்கிக் கொண்டு, கணையைக் கண்களிலே பதித்து வைத்திருக்கும் புதுமையான பதுமையவள்! கோல மயில் சாயலும், கோகிலத்தின் சாயலும், அவளின் உடல் வளைவிலும்—குரல் இனிமையிலும் பிரதிபலித்தன. அன்ன நடைக்கும், அழகு இடைக்கும் அவளுடைய வெண்நிற உடை அழகு சேர்த்துக்கொண்டிருந்தது சுந்தரத்திற் கேற்றவாறு அவள் பெயரும் சுந்தரியே! இந்த சுந்தரியைச் சொந்தமாக்கிச் கொள்ள போட்டியிட்ட காளையர்கள் கணக்கிலடங்கார்! முடிவு அனைவருக்கும் ஏமாற்றமே!

"வீணாசை வேண்டாம் என் மேல், உங்கள் விருந்துக்கு நானல்ல கனி! இதோ, இவ்வுலக பந்தத்தையே வெட்டிக் கொள்கிறேன்!" என்று கூறுவதுபோல் முடித்துவிட்ட கூந்தலிலே உருத்திராட்ச மணியைத் தொடுத்து விட்டாள் அவள்!

ஆம், துறவு பூண்டுவிட்டாள் அந்தத் தோகை!

துறவுக் கோலமும் அத் துடியிடையாளுக்கு ஒரு தனியான எழிலைக் கொடுத்துக் கொண்டு தான் இருந்தது! சைவத்தில் பற்று வைத்த அவள் சமயத்திற்காக எதையும் செய்ய சித்தமாயிருந்தாள்! அவளுடைய மத போதையின் உச்சக் கட்டத்தை உணர்ந்து கொண்டனர் மதத் தலைவர்கள்! 'இனிமேல் இவள் நாம் சுற்றிவிடும் பம்பரம்!' என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டு, சமயத்தை எதிர் நோக்கிக் கிடந்தனர் அந்தச் சைவ சமயத்தினர்!

அன்று நகரமெங்கும் குதுகலமாயும், கலகலப்போடும் மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து கிடந்தனர்! காரணம்,புத்தர் சேதவனச் சோலையிலே வந்து தங்கப் போகிறார் என்பதே! சாந்த சொரூபியைக் காண்பதோடு, அவருடைய இனிமை பொருந்திய சொற்கேட்டு மகிழலாம் என்ற எண்ணமே மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது! அப்போது புத்த மதம் எங்கும் பரவியிருந்த நேரம். கொல்லாமையின் குரு. புத்துலகச் சித்தரான புத்தர் வருகை தர இருக்கிறார் என்றால், விழாக் கோலம் குறைந்தா காணப்படும்? பொங்குமிதயத்தோடு இன்முகங் காட்டி வரவேற்றனர் மக்கள் சித்தார்த்தரை!

அவர் தங்கியிருந்த சேதவனச் சோலையிலே தினமும் திரள் திரளாக மக்கள்கூடி அவருடைய அறிவுரைகளைக் கேட்டுச் சென்றனர். ஊரெங்கும் இதே பேச்சும்—உற்சாகமும் காணப்பட்டன!

பிற மதவாதிகளால் இதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? பொறுமையால் பொங்கி எழுந்தனர்!

"நேற்று முளைத்த பௌத்தத்திற்கா இத்தனைச் செல்வாக்கு தொன்று தொட்டு இருந்துவரும் சைவத்திற்குச் சமாதி கட்டிவிடுவார்கள் போலிருக்கிறதே! இனியும் தாமதித்தால் நாம் அழிந்தே போய்விடுவோம் இனி பௌத்தத்தின் வளர்ச்சியை நாம் தடை செய்தே ஆகவேண்டும். அதற்கு என்ன வழி? கொள்கைகளிலோ குறை காணமுடியாது! கொள்கைக்கே குருவான புத்தனுக்கே களங்கத்தைக் கற்பித்துவிட்டால்...?" இப்படி எண்ணினர் அந்த எத்தர்கள்.

காலைக் கதிரவன் தன் பொன்னொளியால் உலகைப் பரவசப் படுத்திக் கொண்டிருந்தான். மக்கள் வெள்ளம்போல் திரண்டு கொண்டிருந்தனர். சேதவனச் சோலையை நோக்கி! அவர்கள் அனைவரும் ஆச்சரியப் படும் படியாகச் சோலையிலிருந்து பழக் கூடையுடன் வந்துகொண்டிருந்தாள் சுந்தரி, மக்கள் புத்தரின் பொன்மொழிகளைக் கேட்டுவிட்டு மாலை வீடு திரும்பும்போது, கூடையில் பழங்களை நிரப்பிக் கொண்டு சோலையை நோக்கி போய்க் கொண்டிருந்தாள் அந்தச் சொர்ணக் கிளி! இது ஒரு நாள் நிகழ்ச்சியாக இருந்திருந்தால் மக்கள் மௌனம் சாதித்திருக்கக்கூடும்! ஆனால், இது வளர்கதைபோல் வளர்ந்து கொண்டே வந்தது.

மக்கள் மனத்திலே சந்தேகப் புயல் வீசத் துவங்கியது. ஒரு நாள் துணிச்சல்காரன் ஒருவன் அவளைப் பார்த்துக் கேட்டுவிட்டான்.

"புத்தருடன் இரவு தங்கி அவருக்குப் பணிவிடைகள் செய்யத்தான் நான் மாலை போவதும், காலை வருவதும்!" என்று கூறிச் சென்றாள் அவள்.

"இதென்ன ஆச்சரியம்! சொல்லொன்று செயலொன்றா?" இக்கேள்விக்குப் பதில் தெரியாமல் மக்கள் தவித்தனர். இச்செய்தியானது காட்டுத் தீயைப்போல் எங்கும் பரவியது. புத்தரையும் புத்தபிட்சுக்களையும் கேவலமாகப் பேசத்தலைப்பட்டனர் மக்கள்!

நாட்டின் நிலையை யுணர்ந்து கொண்ட சைவ சமயத்தினர், மக்களைத் தம்பால் இழுக்க இதுவே தக்க தருணமென்று முடிவு செய்தனர்.

சைவத்தின் சதி சதிராடியது!

திடீரென்று ஒரு நாள் சுந்தரியின் சுந்தர உடல் கொலை செய்யப்பட்டுச் சேதவனச் சோலையின் ஒரு மூலையிலே வீசியெறியப் பட்டுக் கிடந்தது!

'யார் செய்த கொலை?' இக்கேள்விக்கு உடனே பதில் தரப் பட்டது மக்களிடையே! அது தான் இது:

"புத்தரிடம் கொண்டிருந்த தொடர்பை வெளிப்படுத்திவிட்டக் காரணத்தால், சுந்தரியைப் புத்த பிட்சுக்கள் கொலை செய்து சோலையிலே போட்டிருக்கிறார்கள்!"

மக்களின் சீற்றம் பௌத்தத்தின்மீது பாய்ந்தது!

சதியில் வெற்றி கண்ட மதத் தலைவர்கள், இச்செய்தியை மன்னனிடம் கொண்டு சென்றனர். கொலைக்குக் காரணத்தைக் கொற்றவனும் விசாரித்தான். 'புத்த பிட்சுக்களே காரணமென்று கூறப்பட்டது!'

'ஆதாரம்?' என்று கேட்டான் அரசன்.

'இல்லை!' என்று பதில் வந்தது.

குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதாகக் கூறி, சுந்தரியின் உடலை அடக்கஞ் செய்ய உத்தரவிட்டான் ஊராள்வோன்.

அபாண்டமாகப் பழியைச் சுமத்தும் பாதகர்களைக் கண்ட புத்த பிட்சுக்கள் புத்தரிடம் அணுகி நடந்த செய்தியினைச் சொல்லி, உடனே இதற்குப் பரிகாரம் தேடாவிடில் நம் மதமே அழிந்து போகும்!" என்று கூறினர். இவை யாவற்றையும் கேள்வியுற்ற புத்தர்.

"பழி சுமத்துபவரும் பொய்யுரைப்போரும் அதிக நாட்கள் தங்களை மறைத்துக் கொண்டிருக்க முடியாது. இதற்காக நீங்கள் கவலைப்படத் தேவையில்லை;இன்றில்லாவிட்டால் நாளை உண்மை வெளியாகியே தீரும்!" என்றுரைத்தார்'

ஒரு நாள் மதுபானக் கடையில் கும்பலும், கூச்சலும் அதிகமாகக் காணப்பட்டது: குடிகாரர்களின் இரைச்சல் வெறியாட்ட நிலையிலே இருந்தது. அச்சமயம் குடி போதையிலே ஒருவன், "சுந்தரியைக் கொன்ற சோம்பேறி மட்டும் என் கையில் கிடைத்தால், அவனைக் கண்டதுண்டமாக வெட்டிவிடுவேன்!" என்று உளறிக்கொண்டே கூறி தள்ளாடிக் கொண்டிருந்தான்,

இதைக் கேட்ட மற்றொரு குடியன் "கிடைத்தால் என்னடா செய்வாய்? அயோக்கியப் பயலே அவளைக் கொன்றுபோட்ட சிங்கம் இதோ இருக்கிறேன், பாரடா! நீயும் இப்படி வந்தால் ஒரே சீவு! அடுத்தக் கணம் உன் தலை என் மடியிலே!" என்று அளவுக்கு மீறிய போதையில் கத்திக் கொண்டிருந்தான்!

இப்பேச்சுக்கள் யாவையும் கவனித்துக் கொண்டிருந்த இருவர் உடனே குடியர்களைக் கைது செய்து இழுத்துச் சென்றனர். அவ்விருவரும் அரசாங்க ஒற்றர்கள் என்பதை அங்கிலையில் அந்தக் குடியர்கள் எங்கே அறியப் போகிறார்கள்?

குற்றவாளிகளை விசாரித்ததில் சதிகாரர்கள் தங்களைச் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்றும், தங்களுக்குப் பணத் தாசையை மூட்டி அந்தச் சுந்தரியைக் கொன்று போடும்படி சொன்னார்களென்றும் வெளி வந்தது!

"யார் அந்த சதிகாரர்கள்?" குடிகாப்போன் கேட்டான்.

"மதத் தலைவர்கள்!" குடியர்கள் பதிலளித்தனர்.

அடுத்த கணம், மதப் போர்வையிலே மறைந்துகொண்டிருக்கும் வெறியர்களும், கொலைக் கஞ்சா கொடும் பாவிகளும் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர் நீதியின் முன்பு!

உண்மையை ஒத்துக்கொண்ட உன்மத்தர்கள், காரணம் கூறும் போது, பௌத்த மதத்தின் வளர்ச்சியைத் தடுக்கவும், தங்கள் மதத்தின் மேன்மையைக் காக்கவுமே இக்கொடுமையைப் புரிந்ததாகக் கூறினர்!

நயவஞ்சகர்களின் நச்சுக் கருத்தினைக் கேட்ட மக்கள் சைவத்தின் சதியை நினைத்துத் அதைத் தூற்றி பௌத்தைப் போற்றினார்கள்.

குற்றவாளிகள் அனைவரும் கொற்றவனால் தண்டிக்கப்பட்டனர்!

புத்தம் சரணம் கச்சாமி!
தர்மம் சரணம் கச்சாமி!
சங்கம் சரணம் கச்சாமி!

என்கின்ற முழக்கம் எங்கும் முழங்கிக்கொண்டிருந்தது.

0—

(4-ம் பக்க தொடர்ச்சி)

தாங்குவார்கள்? எவர் கொடுக்கும் பணத்தை வாரி இறைத்து அவர்களை வாழ வைப்பார்கள்?

தேசிய விளக்க அறிக்கையில் இந்திய மொத்த ஜனத்தொகையான 40 கோடியில் 20 கோடி மக்கள் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்குக் குறைவாக வருமானம் பெற்று வாழ்கிறார்கள் என்று காட்டுகிறது!

அந்த இருபதுகோடியிலும் பல ரகம்.

அதாவது எட்டுகோடி மக்களின் ஒரு நாள் வாழ்வு எட்டு அணாவில் அடங்கிவிடுகிறதாம்!

6 கோடி மக்களுக்கு 5—அணாவில் அடங்கி விடுகிறதாம்.

4- கோடி மக்களுக்கு 4—அணாவில் அடங்கி விடுகிறதாம்!

2 கோடி மக்களுக்கு—பரிதாபம் ஒரு நாளில் உண்ண, உடுக்க, இருக்க இரண்டே அணாவுக்குள் அடங்கிவிடுகிறது, என்று காரித்துப்புகிறது

இந்த நிலையில், திபேத்திலிருந்து 28,000 அகதிகள் இறக்குமதியாகி இருக்கின்றனர். பொருளாதார நெருக்கடியும், பஞ்சமும் பசியும் விஞ்சியுள்ள இந்த நாளில் கருணையின் பெயரால் ஏற்றி வைக்கப்பட்ட இந்தச் சுமை, ஏழை மக்களின் கண்ணீரைத் தான் சிந்த வைக்குமே தவிர—அரசியல் இலாபம் எதுவும் கிடைக்கும் என்று கூறுவதற்கில்லை!!

—0—

தமிழரும் ஆந்திரரும்

தமிழறிஞர் மு. இராகவையங்கார் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழர் ஆந்திரர் உறவு பற்றியும், அவர்தம் மொழிகள் பற்றியும் ஆற்றிய பேச்சின் 4-ம் பகுதி இங்கு தரப்படுகிறது. திராவிட நாடு எங்கிருக்கிறது, என்று ஏதும் தெரியாதவர்போல் கேட்போர் படித்துத் தெளியவும், கழகத்தோழர்கள் பயன் பெறவும் இந்த ஆராய்ச்சிக் கட்டுரைத்தொடர் பயன்படும்.

4

இவ்வாறு நடந்தபோர்களெொன்றில், வீர ராஜேந்திரன் என்ற சோழன் வேங்கிநாட்டை வென்று விஜயவாடை என்ற நகரிலிருந்தாண்ட விஜயாதித்தன் என்ற சளுக்கரசனுக்கு அதனை உதவினன் என்பது சரித்திரத்தால் அறியப்படுகின்றது. வீர சோழியவுரையில்— (சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம் பக். 25)—

"வேங்கைவள நாடன் விசயவா
டைக்கதிபன்
ஓங்கு புகழுதயா தித்தனுக்குத்-
—தாங்குகடல்
நேராமென் ருலு நிறத்தாலவன்
செய்யன்
காரார் நிறமக் கடல்"

என்ற பழஞ்செய்யுளொன்று உதாகரிக்கப்பட்டுள்ளது. இதனிற் குறிக்கப்பட்டவரசன், மேற்கூறிய உதவி பெற்ற விஜயாதித்தனே அன்றி வேறொரு சளுக்கரசனே ஆதல் வேண்டும்.

இனி, சோழர்க்கும் வேங்கியரசரான சளுக்கர்க்கும் நடந்த இப்போர்களினின்று மற்றொரு விசேடமும் அமைவதாயிற்று, அஃதாவது—சோழர்கள் தங்கள் பெண்களை அச்சளுக்கியர்க்கு மூன்று தலை முறையாக மணம்புரிவித்து அவருடன் உறவு கொண்டாடி வந்ததேயாகும். கீழைச்சளுக்கிவரில் முதல்வனாகிய விமலா தித்தன் என்பான். (கி. பி. 1015—1022) முதல் இராஜராஜசோழன் மகள் குந்தவையையும், அவன் மகன் சளுக்கிய ராஜராஜநரேந்திரன் என்பான் (1022—1061) கங்கைகொண்ட சோழன் மகள் அம்மங்கதேவியையும், மேலைச் சளுக்கியரில் விக்கிரமாதித்தன் என்பான் வீர ராசேந்திரசோழன் மகளையும் மணம் புரிந்து கொண்டவர்களென்பது சரித்திர மூலம் அறியப்படும். இத்தகைய சம்பந்தங்களால் ஆதியிற்பகைமை கொண்டிருந்த அவ்வரசரிருவரும் சமாதானம் பெறலாயினர். அன்றியும், இக் கீழைச்சளுக்கியத் தொடர்பானது, முடிவில் ஆந்திர தேசத்தையே தமிழரது உரிமை நாடாகவும் ஆக்கிவிட்டதென்பது குறிப்பிடத்தக்கது; எவ்வாறெனில்—முற்கூறியவாறு, இராசேந்திரன் மகள் அம்மங்கதேவியை மணம் புரிந்து கொண்டு ஆந்திர தேசத்தை ஆண்டுவந்த சளுக்கிய ராசராசன் கி. பி. 1062-ல் இறந்ததும், அவன்மகன் இராசேந்திரன் என்பான் அந்நாட்டுக்கு அரசனாயினன். அப்போது சோழராஜ்யத்துக்கு வமிசமில்லாமையால் பட்டவுரிமை பற்றிப் பெருங்குழப்பம் நேரவே, தானே அந்த ராஜ்யத்துக்குத் தௌகித்திர பாத்தியங் கொண்டாடி அதனையுங் கைப்பற்றிக் கொண்டு சோழசிம்மாஸனத்தில் கி. பி. 1070-ல் ஏறினன். அதனால் தமிழ் நாடுகளையெல்லாம் உள்ளடக்கிய சோழ ஏகாதிபத்தியமும் ஆந்தரதேசமும் இவனது ஒரு குடைக்கீழ் அடங்குவதாயிற்று இவரை—அபயன், விஜயதரன், குலோத்துங்கன் முதலிய பெயர்கள் பெற்று விளங்கிய சோழன். தந்தை வழியால் சந்திர குலத்துச் சோழ வமிசத்தவனுவகம் இவன் விளங்கினவன். ஆனால்,

இருண்முழுது மகற்றும்விது
—குலத்தோன் றேவி
இகல்விளங்கு தபனகுதத்
—திராச ராசன்
அருடிருவின் திருவயிற்றில்
—வந்து தோன்றி
ஆலிலையி லவதரித்த
—வைனே மீள்'

"திங்களி னிளங்குழவி
—செம்மலிவ னென்றும்
செய்யபரு திக்குழவி
—யையனிவ னென்றும்
தங்களின் மகிழ்ந்திரு குலத்
—தரசர் தாமும்
தனித்தனி யுவப்பதொர்
—தவப்பயனு மொத்தே"

என்று இவன் காலத்துப் புலவர் பெருமக்களால் உபயகுலோத்தமனெனப் புகழ்ந்து கூறப்பட்டான். இக்குலோத்துங்கன் பெரு வீரனனமையால் தெற்கிலும் வடக்கிலும் பல தேசங்களை வென்று பகையரசரெல்லாம் நடுநடுங்கும்படி செய்து ஒடுக்கினன். ஒருகால் கலிங்க நாட்டரசனை சோடகங்கன் என்ற அனந்தபதுமன் தனக்குரிய திறையைக் கொடுக்க மறுத்தமைப் பற்றித் தன் சேனைபதியாகிய கருணாகரத்தொண்டைமானைக்கொண்டு அக்கலிங்கத்தின் மேற் படையெடுக்கச் செய்து வென்று அதனையுந் தன் கீழ்ப்படுத்தினன். இப்பெரிய வெற்றியே, சயங்கொண்டார் என்ற புலவர் பெருமானியற்றிய கலிங்கத்துப் பரணி என்ற நூலாற் சிறப்பித்துப் பாடப்பெற்றது. தன் மகன் வீர சோழன், விக்கிரமசோழன் என்பவர்களை வேங்கி நாட்டின் பிரதிநிதிகளாகவைத்து தான் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து சோழ ஏகாதிபத்தியத்தை திறமையுடன் நெடுங்காலம் ஆட்சி புரிந்து கி. பி. 1117-ல் இறந்தான்

இவற்குப்பின் இவன் மகன் விக்கிரமசோழன் பட்டமடைந்தனன். இவன் காலத்தும், இவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன், பேரன்—இராசராசன் (2) காலங்களிலும் ஒட்டக்கூத்தர், சேக்கிழார், பேராசிரியர் போன்ற பெரும் புலவர்கள் விளங்கினர். இவ்வரசரெல்லாம் தமிழ, ஆந்திரமென்ற இரண்டு தேசங்கட்கும் அதிபதிகளாய் ஆட்சி புரிந்தவர்களே. இவர்களாட்சியில், சோழ வமிசத்தைச் சேர்ந்த தலைவர், பலர் ஆந்திர தேசங்களிற் பிரதிநிதிகளாய் அமைய, அவ்வமிசத்தவர், வெலநாண்டுச் சோழர் பொத்தப்பிச் சோழர் முதலிய பெயர்களுடன் ஆந்திர தேசப் பகுதிகளை ஆண்டு முடிவில் ஆந்திரர்களாகவே ஆனார்கள். இவர்களைப்பற்றிப் பாடப்பெற்ற ஆந்திர நூல்கள்சிலவும்உண்டென்பர்.

மேலும், இக்காலத்துத் தமிழ்ப் புலவர்கள் சிலர்க்கு ஆந்திர நூல்களில் ஆராய்ச்சியுமிருந்தது. உத்தேசம் 11 ஆம் நூற்றூண்டில் இயற்றப்பட்டதாகச் சொல்லக் கூடியயாப்பருங்கலவிருத்திஎன்ற அரிய உரை நூலிலே ஆந்திர பாஷையிற் பழைமையாக வழங்கிவந்த யாப்பிலக்கண நூல் ஒன்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதனை—"இவற்றை யெல்லாம்.....குணகாங்கி" என்னுங் கருநாடகச் சந்தமும், வாஞ்சியார் செய்த வடுகச் சந்தமும் ஆகியவற்றுள்ளும், மாபுராண முதலாகிய தமிழ் நூலுள்ளும் புகுதியுடையார் வாய்க் கேட்டுக் கொள்க" எனவரும் அவ்விருத்தி வாக்கியத்தால் அறியலாம். இதனால், கன்னட ஆந்திர பாஷைகளில் அமைந்த யாப்பு நூல்களிலும் பண்டைத் தமிழ்ப் புலவர்க்கு உணர்ச்சி யிருந்தமை புலப்படுவதன்றோ? வடுகச் சந்தநூல் செய்தவர் வாஞ்சியார் என்று அச்சுப் பிரதியிற் காணப்படுவதாயினும் ஏட்டெழுத்து முறையில் "அவரஞ்சியார் செய்த வடுகச் சந்தமும்" எனவும் படிக்கக்கூடியதாம். இத்தகைய பெயருடைய ஆந்திரவாசிரியரையும் அவர் நூலையும் பற்றி ஒன்றுமே இப்போது தெரியவரவில்லை. இங்ஙனம் ஆந்திர பாஷையில் மிகப் பிராசீனமான யாப்பு நூலொன்றிலிருந்தது என்ற அரிய செய்தி 11-ஆம் நூற்றுண்டுத் தமிழ் மக்களது எழுத்திலிருந்து வெளியாகிது ஆந்திர மக்கள் அறிந்து மகிழத் தக்கதாம்.

(—தொடரும்

படையோடு நடைபோடு!

உயர்வான கழகத்தைப் பழிதீர்க்கவே—சிலர்
உதவாத செயல்செய்து விளையாடினர்
அயராத அழியாத கொள்கைதனை—அவர்
அறியாமல் புரியாமல் வசைபாடினர்!
துயர்தீர நம்நாட்டை நாம்வாங்கவே—மிகத்
துணிவோடு கனிவோடு பணியாற்றுவோம்!
பயன்காண அறப்போரை உருவாக்குவோம்—நீ
படையோடு நடைபோடு விரைவாகவே!

எவருண்டு அண்ணாவை விடவல்லவர்?—அவர்
எதிர்காலம் உருவாக்கித் தரும்நல்லவர்!
அவர்சொல்லும் வழிசெல்லல் சரியானது—"அது
அநியாயம்!" எனும்வார்த்தை வெறியானது!
கவலைக்கு இடமில்லை கண்ணைத்துடை!—நம்
கழகத்தின் வளர்ச்சிக்கு இல்லைதடை
சவமான வெறுங்கொள்கை எவன்நாடுவான்?—செத்த
சவத்துக்கு மணமாலை எவன்போடுவான்?

விண்மீன்கள் தரைமீது விழுந்தாலுமே வானம்
வீழாது! வீழாது! வீழாதடா!
கண்ணொன்றும் கழலாது எந்நாளிலும்—மூக்குக்
கண்ணாடி கழல்கின்ற நேரத்திலே!
அண்ணாவின் கழகத்தில் எவன்செல்லினும்—அது
அழியாது! அழியாது! அழியாதடா!
பண்பாடு தெம்போடு! நலங்காணவே—நீ
படையோடு நடைரோபடு விரைவாகவே!

--கொள்கைக் கவிஞன்